
Rgd. No. M. 2194



15 MAY 19

# மாத்வமித்திரன்.



# The Madhwa Mitran.


Editor, Bhagavatha Ranganathachariar

KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.





| Vol. 4 | ஆங்கீரஸ ஸம்வத்ஸரம் | No10 |
|---|---|---|
| புஸ்தகம் 4 | வைசாக மாஸம்<br>பௌர்ணமி (20—5—32) | நெ10 |




| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | சிறுவர்களுக்கான கதை. | 289 |
| 2. | ஸ்ரீநரஸிம்ஹஸ்துதி (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்.) | 291 |
| 3. | ஸ்ரீமத்வமத கிரந்தங்கள். | 297 |
| 4. | காடகோபநிஷத். | 299 |
| 5. | ஸ்ரீராகவனுடைய வனவாஸத்தின் தினசரி சம்பவ குறிப்பு. | 303 |
| 6. | ஸ்ரீதாத்பர்யநிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்.) | 307 |
| 7. | செய்தித்திரட்டு. | 315 |
| 8 | இரவில் அதிகநேரம் பஜனை தகாது. (மைசூர்நாஹரி தாஸர்.) | 319 |
| | [illegible]தினங்கள். | 320 |

ஆசிரியர்

பாகவத ரங்கநாதாசாரியார்.

## SRI RAGHU VILAS, MADURA.

A fully equipped Hotel famous for its cleanliness, Superiority and palatial surroundings noted for its up-to-date Varieties with first-rate preparations.

**R. Bindumathava Rao,**
*Proprietor.*

ஸ்ரீ ரகுவிலாஸ் காப்பி ஹோட்டல்,
20 டவுன்ஹால் ரோடு, மதுரை.

R. ரகூத்தமராவ் மானேஜர்.

---

## ஏஜண்டுகள் தேவை.

மானேஜர் மாத்வமித்திரன்
ஸ்ரீவியாஸ விலாசம், கும்பகோணம்.

---

## A Book of Easy English Verse

By
**V. Ramachandra Rao,** B.A., B.L.,

*Certain selections from the Ramayana etc.,*
*A Book for you to enjoy a happy half hour.*

Price 4 As. POST FREE.

Apply to:—
***THE MANAGER,***
**THE MADWAMITRAN,**
Sri Vyasa Vilas,
Kumbakonam.


ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत्, तत्त्वतो भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

5 MAY 1932

## சிறுவர்களுக்கான கதை.

### ஸ்ரீ நரஸிம்ம ஜயந்தி.

நரஸிம்ம ஜயந்தியன்று உங்கள் வீட்டில் ஆராதனை நடத்தப்பட்ட ஸ்ரீ நரஸிம்ஹஸ்வாமி படத்தில் எப்படி காணப்படுகிறார். முகம் ஸிம்ஹம் போலும் சரீரம் மனுஷ்யன்போலுமிருக்கிறார். அவர் ஏன் அப்படி ஆனாரென்றால் அவருடைய சத்ருவான ஹிரண்யனைக்கொல்ல கோபங்கொண்டு அந்த ஸிம்ஹ முகங்கொண்ட ரூபத்தை எடுத்தார். கோபத்திற்கு காரணம் அவருடைய சத்ருவான ஹிரண்யனென்ற அஸுரன் ஹரியைச்சேர்ந்தவர்களான இந்திராதி லோகபாலகர்களை அடித்து விரட்டி அவர்களின் ராஜ்யத்தை பிடுங்கிக்கொண்டானென்றில்லை. அதனால் அவர் கோபங்கொள்ளவில்லை. ஹரிபக்தனான அவனுடைய பிள்ளை பிரஹ்லாதனையும் பலவாறு ஹிம்ஸித்தானென்றும் கோபங்கொள்ளவில்லை. பிரஹ்லாதனை மலையிலிருந்து உருட்டினான். சமுத்திரத்தில் தள்ளினான். கொதிக்கும் எண்ணையில் போட்டான். பாம்புகளை விட்டு கடிக்கச்செய்தான். பகவான் அவனைக் காப்பாற்றினாரேயன்றி உடனே வெளிவரவில்லை. முடிவில் ஹிரண்யன் கத்தியை உருவிக்கொண்டு அடே! நானே உன்னைக்கொல்லப்போகிறேனென்று சொல்ல

பிரஹ்லாதன். என்னைக்காக்க ஈசுவரனிருக்கிறான். இதுவரை அவர் காக்கவில்லையா?

ஹிரண்: யஸ்த்வயா மந்தபாக்யோக்த: மதன்யோ ஜகதீசுவர: அடே பாக்யம் கெட்டவனே! ஈசுவரன் யாரடா என்னைத்தவிர?

பிரஹ்: (ஆச்சரியத்துடன்) நீயா ஈசுவரன். நீயா ஸ்வாமி. நீ ஹிரண்யகசிபுதானே. ஸ்வாமி ஒருவர் தனியாக இருக்கிறார்.

ஹிரண்: தனியாகவா இருக்கிறார். அப்படியானால் அவர் எங்கே! க்வாஸௌ.

பிரஹ்: அவர் எங்கேயா! ஸ ஸர்வத்ர. அவர் எங்குமிருக்கிறார்.

ஹிரண்: அவர் எங்குமிருக்கிறார். உம். அப்படியா. மூடனே! என் இந்த கம்பத்திலில்லை. கஸ்மாத் ஸ்தம்பே ந.

பிரஹ்: இல்லையா! இருக்கிறாரே! நான் ப்ரத்யக்ஷமாய் பார்க்கிறேனே! திருச்யதே!

யஸ்த்வயா மந்தபாக்யோக்தோ மதன்யோ ஜகதீசுவர:/ க்வாஸௌ யதி ஸ ஸர்வத்ர கஸ்மாத் ஸ்தம்பே நதிருச்யதே॥ என்றார் சுகாசாரியார். மகாபாகவதனான பிரஹ்லாதனுக்குச் செய்த அபசாரங்களை எல்லாம் பொறுத்திருந்த ஸ்ரீஹரி நான்தான் ஸ்வாமி, நான்தான் ஈசுவரன், என்னைத்தவிர ஈசுவரன் ஒருவன் தனியாக இல்லையென்று அவன் ஸ்பஷ்டமாய் சொன்னதை சற்றும் பொறுக்காமல் அவன் எந்த இடத்தில் பகவானிருப்பதை சந்தேகித்தானோ அந்த கம்பத்தையே பிளந்துகொகொண்டு அக்ஷணமே ரௌத்ராகாரமாய் மகா கோபத்துடன் அவனை பிளக்க மிருகசிரேஷ்டமான சிம்ஹ ரூபத்துடன் வெளிவந்து நானே ஈசுவரனென்றெண்ணிய அவனுடைய ஹிருதயத்தைப் பிளந்து உதிரத்தைப்பெருகவிட்டு பயங்கரமான உருவத்துடன் அட்டகாசம் செய்தார். ஆகவே நானே கடவுள் என்றெண்ணிவிடாதீர்கள். இந்த நரஸிம்ஹ ஸ்வாமியின் விருத்தாந்தம் ஞாபகத்திலிருக்கட்டும் அவர் எதையும் பொறுப்பார். நான்தான் ஸ்வாமி நான் பரபிரம்மம் என்று சொல்வதை சற்றும் சகியார். அநந்தகல்யாண குணபூர்ணனாய் நிர்தோஷனாய் ஸர்வக்ஞனாய் ஸர்வசக்தனாயுள்ள பகவானின் எல்லா மகாத்மியங்களையும் களவாடி அவரை, ஸம்ஸாரத்திலுழன்று பலவகை துக்கங்களை அனுபவிக்கும் அதமஜீவனெனச்சொன்னால் பகவான் கோபங்கொண்டு அப்படிச்சொன்னவனின் குடலைப்பிடுங்கி ஏன் எடுக்கமாட்டார். ஆகவே நரஸிம்ஹரின் கோபத்திற்கு ஆளாகாமல் நானே ஸ்வாமி என்று சொல்லாமல் அவர் பிரம்ம ருத்திரேந்திரர்களுக்கும் ப்ரபு அவர்தான் எனக்கு ரக்ஷகர் அவருக்கு ஸமமானவரோ உத்தமரோ யாருமில்லை என்றெண்ணி அவரைப்பிரார்த்தித்து உங்களிஷ்டத்தைப் பெறுங்கள். நானே நரஸிம்ஹன் நானே ஸ்வாமி என்று சிலர் சொல்லுகின்றனரே என்றால் அவர்கள் ஹரித்வேஷிகள். பக்தர்களைப்போல்



பஜனை முதலிய ஸத்காரியங்களைச் செய்கின்றனரேயன்றி அவர்கள் செய்வது ஹரித்வேஷமே. பேராசை பிடித்து நான் ஸ்வாமி இவன் ஸ்வாமி என்று சொல்லி ஸாமாணியர்களை ஏமாற்றுகின்றனர். இதனால் நரஸிம்ஹர் ஏமாறிப்போகமாட்டார். அவர்களுக்கு கடுமையான தண்டனையை கட்டாயம் விதிக்கிறேனென்று பகவானே பகவத்கீதையாகிய தஸ்தாவேஜியில் வாக்குறுதி செய்து கொடுத்து இந்த நரஸிம்ஹாவதாராதிகளால் எல்லோரையும் நம்பும்படி செய்திருக்கிறார். ஆகவே அவர்களை பகவான் நிச்சயமாய் தண்டிப்பாரென்றறிவீர்களாக.

---

## ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியாளியற்றிய

# ஸ்ரீ நரஸிம்மஸ்துதி.

---

(1) ப்ரளயகாலத்தில் சூரியனின் பயங்கரமான உருவங்கொண்ட காந்திமண்டலத்தை திரஸ்கரிக்கும் மேலான வெளிச்சத்தால் பிரகாசப்படுத்தும் பத்து திக்குகளின் இடைவெளியைக் கொண்டவரே! சத்துருக்களுக்கு மிகுந்த பயத்தைத் தருபவரே! கோபத்தால் மிக்க கடுமையாய் உரக்க அட்டகாசம் புரிகிறவரே! தாங்கமாளாத பராக்கிரமம்படைத்த ஹே! நரஸிம்ஹா! எனக்கு அஹிதமான பாபத்தையும் சத்துருபாதையையும் கொளுத்தி சாம்பலாக்கிவிடுங்கள். (2) ஹிரண்யனின் இரக்தம் பூசியதால்தான் சிவந்ததோவென்று எண்ணும் படியான சரணங்களால் சோபிதமானவரே! தாங்கள் வீரஸம் கொண்டு யுத்தம் செய்யும் சமயம் வேகமாய் கால்களை வைத்து நடமாடும் பொழுது அந்த மிக்க மேலான காலடி சப்தம் நாற்புறமும் வியாபித்து பதினான்கு லோகங்களும் நடுநடுங்கிப்போய் அங்குள்ள பிரும்மருத்ரேந்திராதி தேவர்கள் தங்களை ஸ்தோத்திரம் செய்தனர். தாங்கமாளாத பராக்கிரமம் உள்ள ஹே! நரஸிம்ஹா! எனக்கு அஹிதமான பாபத்தையும் சத்துருபாதையையும் கொளுத்தி சாம்பலாக்கி விடுங்கள். (3) பகவன்! மேகசமூகங்கள் கர்ஜிப்பதுபோல சப்தம் செய்யும் வெகு விரைவான நடையுள்ள அஸுரக்கும்பல்கள் தங்களுடைய கோரமான பரிகாயுதம் போன்ற கனைக்கால்களையும்

மகத்தான தேஜோமயபர்வதம்போன்ற துடைகளையும் தூரத்தில் இருந்தபடியே பார்த்து பயந்துபோய் மேகங்கள் அடர்ந்து மறைவாயுள்ள ஆகாயத்திலோடி பதுங்கினர். தாங்கமாளாத பராக்ரமம் உள்ள ஹே! நரஸிம்ஹா! என் பாபத்தையும் சத்ரு பாதையையும் கொளுத்தி சாம்பலாக்கிவிடுங்கள். (4) தங்களுடைய அழகிய இடையிலுள்ள நிதம்பப்பிரதேசமாகிய மலைப்பிராந்தியத்தில் விளங்கும் சிரேஷ்டமான தங்கபூமியின் காந்தியைப்போல் பிரகாசிக்கும் பீதாம்பர உடையாகிய மின்னல், கொடூரமானவர்களிலும் கொடூரமானவர்களான கெட்ட பரபரப்புள்ள அஸுரர்களின் கண்களைப் பறிப்பதில் மேலான சாமர்த்தியம் படைத்திருக்கிறது. தாங்கமாளாத பராக்ரமமுள்ள ஹே! நரஸிம்ஹா! என் சத்ரு பாதையையும் பாபத்தையும் கொளுத்தி சாம்பலாக்கிவிடுங்கள். (5) மிக்க தீக்ஷிண்யமான நகங்களாகிய வஜ்ராயுதத்தால் பிளக்கப்பட்ட கடூரமான ஹிரண்யனின் உயர்ந்ததான மார்பாகிய பர்வத சிகரத்தினின்றும் பெருகிய உதிரத்தால் தோய்ந்த சரீரத்தின் நடுபாகமுள்ளப்ரபுவே! அழகிய மூன்று மடியுள்ள மங்களகரமான வயிறுள்ளவரே! அழகு பொருந்திய ஆழமான நாபியுள்ளவரே! பொறுக்கமாளாத பராக்ரமம் படைத்த ஹே நரஸிம்ஹா! என் பாபத்தையும் சத்ரு பாதையையும் கொளுத்தி சாம்பலாக்கி விடுங்கள். (6) தாங்கள் நாசம் செய்த ஹிரண்யனின் மார்பு வியாபித்திருந்ததால் அந்தரிக்ஷலோகத்தில் இதுவரை மறைந்துகிடந்த தங்களைச்சேர்ந்த நக்ஷத்திரமாலைகள் அந்தோ! அவனைக் கொன்றவுடன் ப்ரத்யக்ஷமாய் அங்கு கண்ணிற்பட்டு பிரகாசித்தன. சங்கு சக்கரத்தை தரித்த ப்ரபுவே! முழங்காலின்மீது இருகைகளை வைத்துக்கொண்ட சதுர்புஜமூர்த்தே! தாங்கமாளாத பராக்ரமம்படைத்த ஹே நரஸிம்ஹா! என் பாபத்தையும் சத்ரு பாதையையும் கொளுத்தி சாம்பலாக்கிவிடுங்கள். (7) தங்களுடைய தீக்ஷிண்யமான படர்ந்த ஏராளமான பிடரிமயிர்களை தாம் உதறுவதால் மேககூட்டங்கள் சிதறுண்டு ஓர் புறமாய் ஒதுங்கி ஆகாயத்திலிடை வெளியில்லாமற் போய் பரிகாயுதம் போன்ற தங்கள் கைகளால் யுத்தம் செய்ய கைகளை நீட்டவும் இடமில்லாமல் அந்த யுத்தத்தைக்குறித்து



தாங்கள் மனதில் சிந்திக்க நேரிட்டது. பொறுக்கமாளாத பராக்ரமம்படைத்த ஹே நரஸிம்ஹா! என் பாபத்தையும் சத்ரு பாதையையும் கொளுத்தி சாம்பலாக்கிவிடுங்கள். (8) ஆக்ரஹத்தால் அசையும் மிக்க பருத்ததான கழுத்துள்ளவரே! உதட்டை மடித்து பற்களால் கடித்துக்கொண்டவரே! மின்னலைப்போல் கண்களைப்பறிக்கும் பிடரியுள்ளவரே! குடிலனான ஹிரண்யனின் கடினமான ஹிருதயபீடத்தை பிளந்திட்டவரே! கழுத்தில் அணிந்து கொண்ட கோரமான குடல் மாலைகளும் இதரமாலைகளும் படபடவென சப்திப்பது யுத்தம் செய்ய தங்களுக்கிருக்கும் பலமான நிஷ்டையை ஸ்பஷ்டமாய் அறிவிக்கிறது. பொறுக்கமாளாத பராக்ரமம் படைத்த ஹே நரஸிம்ஹா! என் பாபத்தையும் சத்ருபாதையையும் கொளுத்தி சாம்பலாக்கிவிடுங்கள். (9) பகவன்! தங்கள் ஸிம்ஹமுகம் ப்ரளயகாலத்திய அநேக சூரியன்களின் காந்தியை மிஞ்சியிருக்கிறது. அன்றியும் வைரிகளைக்கொல்வதில் அஸஹ்யமான வேகத்தைக்கொண்டிருக்கிறது. காலாக்னியின் ஏராளமான சுவாலைகளை வெட்கப்படும்படி செய்யும் அநந்தமான நெருப்பு ஜ்வாலைகளை படைத்திருக்கிறது. சத்ருவான ஹிரண்யனின் விஷயத்தில் விசித்திரமான காரியங்களை கொண்டிருக்கிறது. பொறுக்கமாளாத பராக்ரமம் படைத்த ஹே நரஸிம்ஹா! என் பாபத்தையும் சத்ரு பாதையையும் கொளுத்தி சாம்பலாக்கிவிடுங்கள். (10) அவிந்துபோகாத அக்னியைக்கொண்டதும், நாக்கை வெளியே நீட்டிவிட்டு பயங்கரமாயிருப்பதுமான தங்கள் வாயில் நடுநடுங்கச்செய்யும் பெருமலைப்பொந்திலுள்ளதைப் போலும் சூரியனின் மணிமய சிருங்கம்போலும் பிரகாசிக்கும் மிக்க கூர்மையான கடைவாய்பற்கள் உள்ளவரே! பொறுக்கமாளாத பராக்ரமம்படைத்த ஹே நரஸிம்ஹா! என் பாபத்தையும் சத்ரு பாதையையும் கொளுத்தி சாம்பலாக்கிவிடுங்கள். (11) தாங்கள் அட்டகாசம் செய்யவும் ஸமுத்திரம்போன்ற பிரம்மாதி தேவர்களின் சமூகம் அஸம்பிரக்ஞாதஸமாதியிலிருந்த தியானம் கலைந்து போய் ஸமாதியின் தைரியத்தை இழந்தனர். விசேஷமாய் விளங்கும் பலவகை ஞானிகள் தங்களுடைய அட்டகாசத்தைக்கேட்டு இந்திர சத்ருவான ஹிரன்யனின் நாசம் ஏற்பட்டுவிடுமென்று

புத்தியில் நிச்சயம் செய்துகொண்டனர். பிரம்மாண்டமான பிரம்மாண்டகடாகத்தை பலமாய் பிளந்திடுவதில் விருத்திபாகி வந்த அட்டகாசம்கொண்ட பகவன்! பொறுக்கமாளாத பராக்கிரமம் படைத்த ஹே நரஸிம்ஹா! என் பாபத்தையும் சத்ரு பாதையையும் கொளுத்தி சாம்பலாக்கிவிடுங்கள். (12) மூவுலகங்களையும் அலக்ஷியமாய் துரும்பைப்போல் பரிபாலிக்கக்கூடியதில் விருப்பங்கொண்டதும், பரமசூக்ஷ்மமான நெருப்பு ஜ்வாலைகளின் ஸ்தானமாயுள்ள சூரியன், சந்திரன், அக்னி முதலியவைகளில் பிரவேசித்திருக்கும் அம்சத்தைக்கொண்டதும், அப்போதே உதித்த சூரியனைப்போல் சிவந்ததும், க்ரூரமான பார்வையுள்ளதுமான மூன்று நேத்ரங்களைக்கொண்ட ப்ரபுவே! பொறுக்கமாளாத பராக்கிரமம்படைத்த ஹே நரஸிம்ஹா! என் பாபத்தையும் சத்ரு பாதையையும் கொளுத்தி சாம்பலாக்கிவிடுங்கள். (13) சுவாதந்திரியமிருப்பதாய் எண்ணி தேசசஞ்சாரம் செய்து திக்விஜயம் செய்து லோகபாலகர்களை அவமதிக்கிறவர்களான, பூபாலகர்களாய் பூமிக்கு பாரமாயுள்ள ஸஜ்ஜன சத்ருக்களான, அஸுரர்களை பிளப்பதும் ஸஜ்ஜனங்களுக்கு உத்தமமான மோக்ஷாதி புருஷார்த்தங்களை அளிப்பதுமான புருவவிலாஸமுள்ளவரே! அதிகமான சோபையுள்ளவரே! தேவர்களுக்கேற்பட்ட பயத்தை பரிகரிப்பவரே! மேலான காந்தியால் தாம் விளங்குகிறீர். பொறுக்கமாளாத பராக்ரமம்படைத்த ஹே நரஸிம்ஹா! என் பபத்தையும் சத்ரு பாதையையும் கொளுத்தி சாம்பலாக்கிவிடுங்கள். (14) காதுகளில் அசையும் மகரகுண்டலங்களால் பிரகாசிக்கும் கன்னங்களைக்கொண்டவரே! நெற்றிக்கண்ணால் க்ரூரமானதாயுள்ள நெற்றியுள்ளவரே! மேலான நாஸிகையைக் கொண்டவரே! சிவந்த உதடுள்ளவரே! எல்லோருக்கும் வரனை அளிப்பவரே! அழகிய பற்களுள்ளவரே! பிரகாசிக்கும் பிடரியுள்ளவரே! ஸத்ருக்களை சங்கரித்தவரே! பொறுக்கமாளாத பராக்கிரமம்படைத்த ஹே நரஸிம்ஹா! என்னுடைய பாபத்தையும் சத்ரு பாதையையும் கொளுத்தி சாம்பலாக்கிவிடுங்கள். (15) அதிகமாய் பிரகாசிக்கும் தலைமயிர்களில் விளங்கும் ரத்னமயமான க்ரீடத்தால் சோபிதமாயிருப்பவரே! காந்தி பெருகும் உத்தமமான கௌஸ்துப மாணிக்யத்தை கழுத்தில் தரித்தவரே! உத்தம ரத்னகசிதமான பாகுபூஷணங்களுள்ளவரே! ஸுவர்ணத்தால் செய்யப்பட்டவைகளான கைவளையல்கள், அரிஞானம், சப்திக்கும் பாதஸரங்கள், மோதிரங்கள், இவைகளைக்கொண்டவரே! பொறுக்கமாளாத பராக்கிரமம் படைத்த ஹே நரஸிம்ஹா! என் பாபத்தையும் சத்ரு பாதையையும் கொளுத்தி சாம்பலாக்கிவிடுங்கள். (16) சக்ரம், சங்கம் என்ன, கத்தி கேடயமென்ன, தனுஸ்ஸு பாணமென்ன, கதை அழகிய முஸலாயுதம் என்ன, கபாலம் அங்குசம் என்ன, சூலம் பாசம் என்ன, இப்படி இரு இருகைகளில் தரித்தும், ஹிரண்யனின் மார்பைப்பிளந்து அவனுடைய குடல் மாலையை இதர இரு கைகளால் தரித்தும், இன்னமும் இருகைகளை துடையின்மீது வைத்துக்கொண்டும் இவ்வாறு பதினாறு புஜங்களுடனுள்ள ப்ரபுவே! பொறுக்கமாளாத பராக்ரமம் படைத்த ஹே நரஸிம்ஹா! என் பாபத்தையும் சத்ரு பாதையையும் கொளுத்தி சாம்பராக்கிவிடுங்கள். (17) பொறுக்கமாளாத பராக்ரமமுள்ள ஹே நரஸிம்ஹா! என் உள்ளேயிருக்கும் சத்ருக்கள் வெளியேயுள்ள சத்ருக்கள் இவர்களை அவர்களின் காரியங்களைச் செய்யவொட்டாமல் சடசடவென்று அதி சீக்கிரமே மயங்கச்செய்யுங்கள். அவர்களை தூரத்திலேயே ஓட்டிவிட்டு சுற்றி சுற்றியடியுங்கள். அவர்களின் சரீரம் தீப்பற்றினுப்போல் கடு கடுவென்று ஸந்தாபப்படும்படி செய்யுங்கள். அவர்களின் சரீரம் படீரென வெடிக்கும்படிச் செய்யுங்கள். பந்துக்களுடன் சத்ருக்கள் என்னைக் கொல்லச்செய்யும் காரியத்தை நாசப்படுத்துங்கள். எனக்கு அஹிதமான பாபத்தையும் சத்ரு பாதையையும் கொளுத்தி பஸ்மமாக்கிவிடுங்கள். (18) பிரம்மா சிவன் இந்திரன் இவர்களை பிரமிக்கச்செய்யும் நெருப்புப்பொறிகளை உற்பத்தி செய்யும் வளைந்த கடைவாய் பற்களைக்கொண்டு நாக்கை வெளியே தள்ளிய வாய் உள்ளவரே! மூன்று கண்களைக்கொண்டவரே என் அபீஷ்டத்தை எல்லாம் தாருங்கள் தாருங்கள். தங்களுடைய சரியான பக்தனை என்னை ரக்ஷியுங்கள். பொறுக்கமாளாத பராக்ரமம் படைத்த ஹே நரஸிம்ஹா! எனக்கு அஹிமானதைக்கொளுத்தி சாம்பலாக்கிவிடுங்கள். (19 ஜயரூபமான சரீரம் உள்ளவரே நிர்தோஷமானவரே ஜயிக்கவேண்டிய சத்துருபக்ஷத்தை ஜயித்துவிடுங்கள். அஸுரனான ஹிரண்யனின் மகனை ப்ரஹ்லாதனைப்போல் தங்கள் பாதத்தில் விழுந்த என்னைப்போன்ற பக்தர்களிடம்தாம் அவதாரகாலத்தில் காட்டியதை விட விருத்தியடைந்ததான கிருபையைக்காட்டுங்கள். நிர்தோஷமானதும் எக்காலத்திலும் இருக்கக்கூடியதுமான தங்களுடைய அபரோக்ஷஞானத்தை எனக்குத்தாரும் தாரும் தாரும். பொறுக்கமாளாத பராக்ரமம் படைத்த ஹே நரஸிம்ஹா! எனக்கு அஹிதமான பாபத்தையும் சத்ரு பாதையையும் கொளுத்தி சாம்பலாக்கிவிடுங்கள். (20) இந்தநரஸிம்ஹஸ்துதி ஸ்ரீநரஸிம்ஹமூர்த்தியின்

சரீரம்போல் எல்லா உலகிலும் அதிகமான காந்தியை தரக்கூடிய தான சக்தியைப்பெற்றது. இதில் கண்டுள்ள சுலோகங்கள் மாலினீ விருத்தத்தில் போடப்பட்டிருக்கின்றன. ஸர்வ அக்ஷரங்களுக்கும் குருவாயுள்ள மகணம் இந்த மாலினீ விருத்தத்திலிருப்பதால் மகணம் பூமி தேவதாகமாயிருப்பதன் நிமித்தம் ஸர்வகுருவான சிரேஷ்டமாயுள்ள ஐசுவரியத்தை இந்த ஸ்தோத்திரம் தரும். இது பிரகாசிக்கும் நகணத்துடனுள்ள யகணம் மகணம் நகணம் யகணம் இவைகளின் ஆனந்த ப்ரதமான காரியங்களாயுள்ள ஆயுஸ் ஐசுவரிய விருத்தி முதலியவைகளைக்கொடுக்கிறது. பதினைந்து அக்ஷரமுள்ள ஜாதியாயிருப்பதன் நிமித்தம் தனிமையான ஐந்து நற்குணங்கள் பொருந்தியிருக்கிறது. இந்த மாலினீ விருத்தத்தின் லக்ஷணம் இரண்டு நகணங்கள் ஒரு மகணம் இரண்டு யகணமாயிருப்பதால் இவ்வாறு பலன்கள் சொல்லப்பட்டன. ஸ்ரீநரஸிம்ஹனின் சரீரமும் மாலினீதான். வைஜயந்திமாலையைக் கொண்டிருப்பது. ஜகத்தை நியமித்தல். ஜகத்தை ஸிருஷ்டித்தல் முதலியவைகளுக்காக உத்தமமான ஞானந்தாதிகளை எப்போதும் கொண்டிருக்கிறது. பிரம்மாதி தேவர்களனைவருக்கும் ஹிதத்தைச் சொல்லும் மகாலட்சுமிக்கு மேலானதாயிருக்கிறது, ஸம்பத்தைத்தருவதாயிருக்கிறது. அப்பேர்பட்ட லக்ஷ்மீநரஸிம்ஹமூர்த்தியையும் இந்த ஸ்தோத்திரத்தையும் ஸேவித்தால் சத்ருஸம்ஹாரமேற்படுவதுமன்றி மகா ஐசுவரியமுண்டாகும். (20) விகுசவம்சத்து திலகரான ஸ்ரீத்ரிவிக்ரம பண்டிதாசாரியாரின் மகனான ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார் துர்மதமான அத்வைதமதத்தைப் பின்பற்றிய வித்வான்களை வாதத்தில் நிக்ரஹம் செய்துகொண்டு கேரள தேசத்தில் சஞ்சரித்துவருகையில் அவரால் தோல்வியடைந்த அத்வைதிகள் அவரை ஜெயிக்கமாளாமல் கோபத்திற்குவசர்களாகி உச்சாடனத்தால் அவரைக்கொன்றுவிட அபிசாரங்களைச் செய்துவரவும் அதை அறிந்துகொண்ட ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார் தனக்கும் மற்றும் விஷ்ணுபக்தர்களுக்கும் எப்போதும் நன்மை ஏற்பட உள்ளேயிருக்கும் காமக்ரோதாதி சத்ருக்களையும் வெளியேயுள்ள சத்ருக்களையும் கொன்றுவிடக் காரணமாயுள்ளதும் ஸமஸ்தபாபங்களைத் தொலைக்கக்கூடியதாயுமுள்ள இந்த நரஸிம்ஹஸ்துதியை இயற்றினார். இதை படனம் செய்கிறவர் காமலோபாதிகளின் சம்பந்தமில்லாதவர்களாய் ஸ்ரீநரஸிம்ஹமூர்த்தியின் சமீபத்தை அடைகிறார்கள்.

ஸ்ரீநாராயண பண்டிதாசாரியாளியற்றிய ஸ்ரீநரஸிம்ஹஸ்துதி
ஸம்பூர்ணம். ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து:



# ஸ்ரீமத்வமத கிரந்தங்கள்.

(முன் தொடர்ச்சி.)

**20. ஆத்ய வரதராஜாசாரியார்:— (உத்தராதிமடம்.)**

147. ஸுபோத சந்திரிகை. 150. தாத்பரிய நிர்ணய வ்யாக்யானம்.
(தத்வப்ரகாசிகைடிப்பணி)
148. ஸதாசாரஸ்மிருதி டீகை. 151. கீதாபாஷ்ய தாத்பரியார்த்தம்.
149. விஷ்ணுஸ்துதி டீகை. (கன்னட பாஷை)

**21. ஆத்ய நரஹரி ஆசாரியார்:— (உத்தராதி மடம்.)**

152. பாகவத தாத்பரிய தீபிகை.
153. விஷ்ணுபுராண டிப்பணி.
154. ஸ்மிருதி கௌஸ்துபம்.

**22. ஆத்யம் நரஸிம்ஹாசாரியார்:— (உத்தராதிமடம்)**

155. தாத்பரிய ப்ரகாசிகை.

**23. ஆத்யம் ஜனார்த்தன பட்டாசாரியார்:- (உத்தராதிமடம்.)**

156. மகாபாரத தாத்பரிய நிர்ணய வ்யாக்யானம். (ஜனார்த்தன பட்டீயம்)
157. பிரமாண பத்ததி டிப்பணி.
158. ஜயதீர்த்த விஜயம்.

**24. ஆத்யம் வேதவியாஸாசாரியார்:— (உத்தராதிமடம்.)**

159. தந்திரஸார டிப்பணி.
160. பிருஹத் வ்யாக்யானம்.
161. பிரமாணபத்ததி டிப்பணி.

**25. ஆத்யம் பாகவத சாமண்ணாசாரியார்:— (இப்பத்திராதிபரின் பிதாமஹர்) உத்தராதிமடம்.**

162. நியாயவிவரண டிப்பணி பாவப்ரகாசம். 196. புதிஷ்டிராச்வாசனகாவ்யம்.
197. மோக்ஷதர்மகதா பாவப்ரகாச:
163. பந்தமித்யாத்வ பஞ்சாசத் ஸ்லோகமாலிகா. 198. ஸப்தரிஷிநாமநிர்வசன வ்யாக்யா.
199. அனுகீதா பாவப்ரகாச:
164. பட்டோஜி குட்டனம். 200. ஹரிவம்ச புஷ்கர ப்ராதுர்பாவ வ்யாக்யானம்.
165. சங்கரபூஷண தூஷணம்.
166. அத்வைதகாலாநல சுலோக வ்யாக்யா. 201. ஜீவத்வய ஸமாயோகவாதம்.
202. ஷஷ்டஸ்கந்திய அனுமான விவரணம்.
167. ஸுதா உபன்யாஸம்.

168. ஸுதா விஷயானுக்ரமணிகா.
169. தத்வ நிர்ணய விஷயானுக்ரமணிகா
170. ஸரஸபாரதி வ்யாக்யா.
171. லக்ஷ்மண ஜ்யேஷ்டவாதார்த்த
172. பரத ஜ்யைஷ்டாதர்ச பாஷாண.
173. வாதிராஜ குருஜுத்வ ஸாதக மான கண்டனம்.
174. ஸப்தசுலோகீ கண்டனம்.
175. தரங்கிணீ சுலோகவ்யாக்யா
176. ப்ராணவ தர்பண கண்டனம்.
177. கிருஷ்ணமத கண்டனம்.
178. புனர்விவாஹவாத கண்டனம்.
179. ஸமுத்ரயானநிஷேதகப்ரமாண ஸங்கிரஹம்.
180. ஆதுனிகோக்தியுக்தி பஞ்சக கண்டனம்.
181. அன்வயஸார ஸங்கிரஹ கிரந்தாஸாங்கத்ய நிரூபணம்.
182. ஈசானஸ்துதி கண்டனம்.
183. துர்வாதி கல்லசபேடிகா.
184. லக்ஷ்ம்யா: விஷ்ண்வவரத்வஸமர்த்தனம்.
185. மத்வமந்திரார்த்த ஸங்கிரஹம்.
186. நியாயஸுதீய சக்திவ்யுத்பத்திவாதம்.
187. மத்வவிஜயபஞ்சதசஸர்கீய சதுஷ்ஷஷ்டிசுலோக வியாக்யா.
188. மீமாம்ஸா பாட்டதீபிகாவித்வததிகரணவ்யாக்யானம்.
189. பாரதசாந்திபர்வ திராவிட வ்யாக்யானம்.
190. தாத்பர்ய நிர்ணய வ்யாக்யா.
191. அசுவினிஸ்துதி வ்யாக்யா. வ்யாக்யாசுலோகா:
192. உத்தரயாயாத வ்யாக்யானம்.
193. அஷ்டாவக்ரீய வ்யாக்யானம்.
194. அக்னிவம்ச கதனம்.
195. யக்ஷப்ரச்ன வ்யாக்யானம்.
203. குருசிஷ்யவாதார்த்தம்.
204. விஜயத்வஜீய துர்கடவாக்ய விவரணம்.
205. ஆர்யபாகவதம்.
206. கிருஷ்ணகுணவர்ணிகீதம்.
207. ராமாயணஸர்கார்த்தஸங்கிரஹ காவ்யம் விருத்தபந்தகர்பிதம்.
208. தனிசுலோகீ ஸம்ஸ்கிருத வ்யாக்யானம்.
209. மத்வகதாஸுதர்பணசம்பு.
210. அநந்தபத்மநாப விஜயகாவியம்.
211. தோதாத்ரிமாகாத்மியம்.
212. நவதிருபதி மாகாத்மியம்.
213. மாத்ருகாமாலாஸ்தவம்.
214. நவரத்னமாலா.
215. நியதிபஞ்சாசத்.
216. ஸத்யவீரகுருதாராவளி.
217. குருரத்னமால காவ்யம்.
218. ஸுந்தரராஜ விஜய காவ்யம்.
219. விசாகராஜாதி சுலோகா:
220. மீனாக்ஷ்யஷ்டகம்.
221. ஸுப்ரமண்யாஷ்டகம்.
222. தசாவதாரஸ்துதி.
223. சாரங்கபாண்யுத்ஸவவர்ணனம்.
224. பஞ்சக்ரோசவர்ணனம்.
225. ஸத்கிரந்த நாமாவளி காவ்யம்.
226. ஸுத்ரநயகாரிகா.
227. த்ரிபாதீநயஸங்கிரஹம்.
228. ஸ்வகிருததீர்த்த க்ஷேத்ரயாத்ராவர்ணனம்.
229. கங்காஷ்டகம்.
230. ஸத்யவீராஷ்டகம்.
231. ஜயதீர்த்தகவசம்.
232. சதுரங்காதிகாரிகா.
233. ஜைமனீயாசுவமேத சங்கிரஹம்.
234. துலாகாவேரிமாகாத்ம்யசங்கிரஹம்.
235. மார்க்கண்டேய புராணசங்கிரஹம்.
236. சந்திரசூரியகுல ராஜவம்சாவளி.



# காடகோபநிஷத்.

(முன் தொடர்ச்சி) முதலாவது வல்லி.

---

(27) ஹே ஞானியே! யமதேவா! வயஸ் முதலான ஸம்பத்துக்களை அடைந்தவர்களான மரணமற்ற தேவர்களின் அருகில் வந்து பிரம்மக்ஞானத்தை ஸம்பாதித்துக்கொள்ளாமல் மரணமடைந்து தமஸ்ஸை அடைந்தவன் எங்குமேயில்லை. என்றால் மரணமடையாமலேயே இருக்கிறான். பிராம்மணாதி வர்ணங்கள் அல்லது சரீர நிறங்கள், விஷயானுபவத்தாலுண்டான ஸுகம், விசேஷமாய் விஷயங்களை அனுபவிப்பதாலுண்டாகும் ஸுகம் இவைகளை முன்பு அனுபவித்திருந்து தற்போது அவைகளில்லாமற்போய் அவைகளையே எண்ணிக்கொண்டு அதிதீர்க்கமான காலம் பிழைத்திருப்பதில் எவன் சந்தோஷப்படுவான். வயது அதிகமானால் கிழத்தனத்தால் போக சக்தி குறைந்து மனதிற்கு துக்கம்தான் உண்டாகும். (28) இறந்தவர்களை பரமாத்மா பிரேரிப்பவனா அல்லவாவென்னும் விஷயத்தில் ஞானிகள் சம்சயப்பட்டு விசாரம் செய்கின்றனவோ அந்த விஷயமாகிய ப்ரேதப்ரேகஸ்வரூபத்தை ஹே மிருத்யுவே! மோக்ஷார்த்தம் எமக்கு உபதேசம் செய்யும். இந்த என் வரன்கூடமாயிருக்கும்படி ஏற்பட்டுவிட்டதால் இந்த வரனைத்தவிர வேறுவரனை நசிகேதஸ் வேண்டுவதில்லை. என்று நசிகேதஸ் சொன்னார்.

முதல் வல்லி முடிந்தது.

---

## முதலாவது அத்யாயம் இரண்டாவது வல்லி

யமதேவன் தான் கொடுக்கத் தயாராகயிருக்கும் புத்ராதி ஐஹிகஸுகங்களை வேண்டாமல் பிரம்ம வித்தையை யாசிக்கும் நசிகேதஸ்ஸை நீ ப்ரசஸ்தனாய் இருக்கிறாயென்று ஸ்தோத்ரம் செய்வதற்காக முதலில் பிரம்மவித்தைக்கிருந்துவரும் பந்தமோசக பாவத்தையும் புத்ராதி காமங்களுக்கிருந்துவரும் பந்தக தன்மையையும் இவைகளை அடைந்தவர்கள் முறையே ஞானிகள் அக்ஞானிகளென்பதையும் அறிவிக்கிறார். 1. மிக்கப்ரசஸ்தமான

பிரம்மஞானமென்பது வேறு. மனதிற்கு மிகவும் ப்ரியமான பெண்டு பிள்ளை முதலிய வேண்டப்படும் பொருள்கள் வேறு. இவை இரண்டும் தனியான ப்ரயோஜனங்களைக்கொண்டிருக்கின்றன. முதலில் சொன்னது பிரம்மஞானமாகிய ச்ரேயஸ் ஆமுஷ்மிகஸுகத்திற்கும், பின்னடி சொன்ன பெண்டுபிள்ளை முதலியவைகளாகிய ப்ரேயஸ் ஐஹிகஸுகத்திற்கும் காரணமாயுள்ளது. அவைகள் மனுஷ்யனைக்கட்டுகின்றன. என்றால் அவை புருஷனிடம் வந்து சேருகின்றன. இந்த ச்ரேயஸ் ப்ரேயஸ் இவைகளில் ச்ரேயஸ்ஸான ப்ரம்மவித்தையை ஏற்றுக்கொண்டவனுக்கு ஸம்ஸாரவிமோசனமேற்படுகிறது. எவன் ப்ரேயஸ்ஸான பெண்டுபிள்ளை முதலிய காமனைகளை விரும்புகிறானோ அவன் பரம புருஷார்த்தத்தினின்றும் ஹீனனாகிறான். ஸம்ஸார பாசத்தால் கட்டுண்டவனாகிறான். 2. மேற்கூறிய ச்ரேயஸ் ப்ரேயஸ் இவையிரண்டும் மனுஷ்யனை அடைந்து நிற்கின்றன. விவேகமுள்ளவன் அந்த இரண்டையும் நன்றாய் விசாரம் செய்து ச்ரேயஸ் மோசகமென்றும் ப்ரேயஸ் பந்தகமென்றும் விவரமாய் அறிந்தபின் மிகவும் ப்ரியமானவைகளான பெண்டுபிள்ளை முதலிய காமனைகளை அலக்ஷியம் செய்து சிரேயஸ்ஸான பிரம்மவித்தையை வேண்டுகிறான். விவேகமில்லாதவனோ யோகக்ஷேமமாகிய ப்ரேயஸ்ஸை வேண்டுகிறான். கிடைக்காத காமனைகள் கிடைப்பது யோகமென்றும் அது விலகிப்போகாமல் ஸ்திரமாயிருப்பது க்ஷேமமென்றும் கருதப்படும். ஆகிய இந்த ஐஹிக ஸுகஸாதனங்களை விவேகமில்லாதவன் விரும்புகிறான். 3. ஹே நசிகேதஸ்ஸே! நான் உங்களுக்கு ப்ரேயஸ்ஸானவைகளைக்கொடுத்து ஏமாற்றப்பார்த்தும் நீங்கள் ப்ரியர்களான பெண்டுபிள்ளை முதலியவைகளையும் ப்ரிய ரூபங்களான வீடு தோட்டம் பயிர் முதலியவைகளையும் மற்றும் பல விருப்பங்களையும் நசுவரமென்றெண்ணி அவைகளை விட்டுவிட்டீர். ஸுவர்ணமயமான கழுத்தில் தரிக்க அருகமாயுள்ள இந்த ப்ரேயஸ்ஸாகிய சங்கிலியை நீங்கள் எடுத்துக்கொள்ளவில்லை. இந்த சங்கிலியை அநேகர் சிலாகிக்கின்றனர். இதில் அநேக மனுஷ்யர்கள் ஈடுபடுகின்றனர். நான் கொடுக்கத் தயாராயிருந்தும் அப்பேர்ப்பட்ட சங்கிலியை நீங்கள் எடுத்துக்கொள்ளவில்லையாத



R 8693

லால் நீங்கள் ப்ரசஸ்தமானவர்கள். 4. ப்ரேயஸ் என்பது ச்ரேயஸ்ஸாகிய வித்தையினின்றும் தனிப்பட்டது. ஐஹிகஸுகத்திற்கு ஸாதனமானது. ச்ரேயஸ் என்பது ஞானரூபமானது. என்றிவ்வாறு ஞானிகள் அறிந்திருக்கின்றனர். இந்த ச்ரேயஸ் ப்ரேயஸ் இரண்டும் ஒன்றுக்கொன்று தூரம் விலகி விருத்தமாயுள்ளவை. விருத்தமான பலனைத் தருகின்றனவை. நசிகேதஸ்ஸே! உங்களை வித்தையை அபேக்ஷிப்பவரென்று நான் அறிந்திருக்கிறேன். மனுஷ்யர்கள் இச்சிக்கும் அநேக ஐஹிக காமனைகள் உங்களுக்கு அபேக்ஷையை உண்டாக்குவதில்லை. என்றால் நீர் ஐஹிகவிஷயங்களால் மயங்கியவராகவில்லை. 5. பிரம்மவித்யையிலிருந்து தனியானதாயுள்ள அவித்யையான ஐஹிக விஷயங்களிலிருந்துகொண்டு அவைகளைமட்டில் சேவித்துவரும் அவர்களே ஞானிகளென்று சொல்லிக்கொண்டு, பண்டிதம்மன்யர்களாய் வக்ரமான நடவடிக்கையுள்ள காமபோகத்தில் மயங்கிப்போன ஜனங்கள் ஓர் குருடனால் அழைத்துப்போகப்பட்ட குருடர்கள்போல் ஸ்வர்க்க நரகாதிகளை அடைகின்றனர். அவர்கள் ஏன் இந்த அல்பஸுகத்தில் ஈடுபடுகிறார்களென்றால் அவர்கள் ச்ரேயஸ்ஸின் ஸாதனத்தைக்காண்பதில்லை என்கிறார். 6. ச்ரேயஸ்ஸுக்கு ஸாதனமாயுள்ள பரமாத்மா பணத்திலுள்ள ஆசையால் மோஹிதனானவனும் விபரீதமாய் எண்ணியிருப்பவனும் பாலனைப்போலுள்ளவனுமான புருஷனுக்கு ஞானவிஷயனாய் ஆவதில்லை. கண்ணிற்படும் இந்த பூலோகம்தானுண்டு, இனி வரப்போகிற பரலோகமென்பதில்லை, ஐசுவரியம் ஸ்திரமாயிருக்கிறதென்று எண்ணியிருப்பவன் இறந்து ப்ராணனை விட்டு நான் விதிக்கும் யாதனைகளை அனுபவிக்கிறான். 7. ச்ரேயஸ்ஸுக்கு ஸாதனனாயிருக்கும் ஸாம்பராயனெனப்படும் பகவான் அநேக ஜனங்களுக்கு சாஸ்திர சிரவணத்தாலுண்டாகும் ஞானத்திற்கு விஷயனாவதில்லை. அப்படியானால் அவர் சப்தத்தால் அறியப்படாதவரோ என்றால் அநேகர் சிரவணம் செய்தாலும் ஸம்பூர்ணமாய் உள்ளபடி அவரை அறியமாட்டார்கள். ஏன் அவர்கள் பகவானை அறிவதில்லை என்றால் அவரை உள்ளபடிச் சொல்லுகிறவரும் கேட்கிறவரும் துர்லபம். அந்த ஸாம்பராயனென்றபெயருள்ளவரான ச்ரேயஸ்ஸுக்கு ஸாதனமாயிருக்கும் பகவானை உண்மையான அவருடைய ஸ்வரூபத்தை உபதே

சிக்கும் ஆசாரியன் கிடைப்பது அரிது. சரியானபடி கற்றுக்கொண்டவனும், உண்மையான் பிரம்மஸ்வரூபத்தைச் சொல்லும் ஆசாரியனை அடைந்தவனும், ஞானியுமான ச்ரோதாவாகிய சிஷ்யனும் கிடைப்பது அரிது. ஈசுவரனில்லையென்று சொல்லும் நிரீசுவரவாதிகளுக்கு ப்ரம்மஞானம் வராமலிருப்பினும் ஈசுவரனிருப்பதாய் ஒப்புக்கொள்ளும் ஸேசுவரவாதிகள் ஈசுவரனை அறிகின்றனரே, பிரம்மத்தைச்சொல்லுகிறவர்களும் கேட்கிறவர்களும் துர்லபமென்று சொன்னதெப்படி, என்றால் ஸேசுவரவாதிகள் பிரம்மஞானிகள் ஆகமாட்டார்களென்கிறார் யமதேவன். 8. அஞ்ஞானியான மனுஷ்யன் உபதேசம் செய்யும் ஞானம் உத்தமமானதன்று, அது அல்பமேயாகும். ஏனெனில் அந்த அஞ்ஞானிகளால் பகவான் பலவகையாய் எண்ணப்படுகிறார். ப்ரகிருதிதான் ஜகத்தை சிருஷ்டிப்பதாயும் ஈசுவரன் பிரயோஜனமில்லையென்று சிலரும், ஈசுவரனை ஜகத்கர்த்தாவாயினும் அவனிடம் எட்டு குணங்கள்தானுண்டு என்று சிலரும், ஈசுவரனுக்கு ப்ராகிருத தேஹமுண்டென்று சிலரும், இவ்வாறு பலவகையாய் அஞ்ஞர்களான பலவகை வாதிகள் எண்ணுவதன் நிமித்தம் அவர்களுக்கு பகவான் சரியாய் அறியப்படுவதில்லை. அத்வைதி உபதேசித்தாலோ பகவத் ஞானமே உண்டாவதில்லை என்கிறார். நான் பரபிரம்மத்தினின்றும் தனிப்பட்டவனென்று ஜீவேசுவர பேதத்தை அறியாமல் ஒன்று என்று ஐக்யத்தை அறிந்துகொண்டவனால் உபதேசம் செய்யப்பட்டதான பிரம்மத்தின் விஷயத்தில் சரியான ஞானமே ஏற்படுவதில்லை. உபதேசிக்கும் ஆசாரியனுடைய வசனத்தால் பிரம்ம ஞானம் உண்டாகாமலிருப்பினும் ப்ரத்யக்ஷம் அனுமானம் இந்த ப்ரமாணங்களால் அந்த பிரம்ம ஞானம் உண்டாகலாமோவென்றால் அந்த ஈசுவரன் அணுவென்ற பரிமாணத்தைவிட மிகவும் அணுவாய் சூக்ஷ்மமாயிருப்பதால் ப்ரத்யக்ஷத்தாலும் அவர் காணப்படுவதில்லை, அனுமானத்திற்கும் எட்டுவதில்லை. கேவலமான அனுமானம் வாதத்தில் நிலைநிற்பதில்லையாதலால் அந்த பிரமாணத்தாலும் அவரை அறியமுடிவதில்லை. ஆனால் பிரம்ம ஞானமடைய உபாயம் யாதெனில் அதை விவரிக்கிறார். 9. பரபிரம்ம விஷயகமான இந்த புத்தி அனுமானத்தால் உண்டாவதுமில்லை, நீக்கப்படுவதுமில்லை. ஆனால் நான் பிரம்மத்தைவிட பின்னன் என்று பேதத்தை அறிந்துகொண்டவனால் உபதேசம் செப்பப்பட்ட புத்திதான் சரியான ப்ரம்ம ஞானத்திற்கு உபயோகப்படுகிறது.

(தொடரும்.)



# ஸ்ரீராகவனுடைய வனவாஸத்தின் தினசரிச் சம்பவக் குறிப்பு.

சைத்ர சுத்த பஞ்சமியன்று வனவாஸம் செய்ய ஸ்ரீராகவன் ஸீதா லக்ஷ்மண சமேதனாய் புறப்பட்டார். அன்று மாலை தமஸாதீரத்தில் வாஸம். ஷஷ்டியன்று கங்காதீரத்தில் குஹனுடன் வாஸம். ஸப்தமியன்று கங்கையைக்கடந்து வனஸ்பதியின் அடியில் வாஸம். அஷ்டமியன்று பரத்வாஜாசிரமம் சேர்ந்தார். நவமியன்று யமுனாதீரம் வந்தார். தசமியன்று சித்ரகூடம் போய்ச் சேர்ந்தார். அன்று மாலை ஸுமந்திரர் அயோத்திக்குள் பிரவேசித்து ஸ்ரீராமர் சித்ரகூடம் போவதாய் தசரதனிடம் அறிவித்தார். தசமி இரவிலேயே தசரதன் ராமவியோகத்தைத் தாளாமல் ஸ்ரீராமா ராமாவென்று புலம்பிக்கொண்டு உயிர் துறந்தார். ஏகாதசியன்று மந்திரிமார்கள் தசரதனின் ப்ரேதத்தை எண்ணைக்கொப்பரையில் போட்டனர். த்வாதசியன்று கேகய நகரத்திற்கு பரதனை அழைத்துவர தூதர்களை அனுப்பியது. அவர்கள் த்ரயோதசி சதுர்தசி முழுவதும் வழிநடந்து பௌர்ணமியன்று இரவில் கேகய நகரம் போய் சேர்ந்தனர். சைத்ர பஹுளப்ரதமையன்று பரதன் அயோத்திக்கு புறப்பட்டான். ஏழு நாள் வழிகடந்து பரதன் நவமி சூரியோதய காலத்தில் அயோத்திக்கு வந்தான். அன்றே தசரதனுக்கு ஸம்ஸ்காரம் நடந்தது. வைசாக சுத்த சதுர்த்தி பஞ்சமி தசரதனுக்கு சிரார்த்தம் நடந்தது. ஷஷ்டியன்று தகனஸ்தலத்தின் சோதனை. ஸ்ரீராகவனைப் பார்க்கப்போக வழியை சரிபடுத்த பரதன் ஆட்களை ஸப்தமியன்று அனுப்பினான் தசமிவரை அவர்கள் சரிப்படுத்தினர். ஏகாதசியன்று ஸ்ரீராகவனைப் பார்க்க பரதன் எல்லோருடன் புறப்பட்டான். அன்றிரவு கங்காதீரத்தில் குஹனுடன் வாஸம். த்வாதசியன்று பரத்வாஜாசிரமம். த்ரயோதசியன்று சித்ரகூடத்தில் ஸ்ரீராகவனை பரதன் தரிசித்தான். சதுர்தசி பௌர்ணமி வைசாகபஹுளப்ரதமை இம்மூன்று நாட்கள் பரதன் சித்ரகூடத்தில் ஸ்ரீராகவனுடன் வசித்தான். த்விதியையன்று ஸ்ரீராகவனுடைய பாதுகையுடன் பரதன் சித்ரகூடம் விட்டு புறப்பட்டான். சதுர்த்தியன்று பரதன் நந்திக்ராமம் வந்து சேர்ந்தான். பஞ்சமியன்று ஸ்ரீராகவன் சித்ரகூடம் விட்டு தண்டகாரண்யம் புறப்பட்டார். வனவாசம் துவக்கி பத்தாவது வருஷம் முடிய மகரிஷிகளின் ஆசிரமங்களிலேயே ஆங்காங்கு வசித்துவந்தார். பிறகு ஸுதீக்ஷ்ணரு

டைய ஆசிரமத்தில் வருஷாகாலம் முடிய வசித்திருந்து பதினோராவது வருஷம் முடிய சிறிது பாக்கியிருக்கும்பொழுது அகஸ்தியாசிரமம் போய்ச்சேர்ந்தார். அங்கு சிறிதுகாலம் வசித்து பிறகு பஞ்சவடிப்போய் கோதாவரி நதிக்கரையில் பதின்மூன்றாவது வருடம் முடிய அங்கு வசித்திருந்தார். பதின்மூன்றாவது வருடம் முடிவதற்குமுன் சூர்பநகையின் நாஸிகாச்சேதனம் கராஸுரவதம் முதலியவை நடந்தன.

ராவணனால் ஸீதாபஹாரம் பதிநான்காவது வருடத்தில் சைத்ர மாஸத்திலென்று சிலரும், பதின்மூன்றாவது வருடத்தில் பால்குண சுத்த அஷ்டமியில் என்று சிலரும், கூறுகின்றனர். அக்னிவேச்யராமாயணமென்னும் நூலில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. ராமர் பதினைந்தாவது வயதில் ஆறுவயதுள்ள ஸீதையை மணந்தார். பிறகு பன்னிரண்டு வருடம் அயோத்தியில் வசித்தார். ராகவனுக்கு இருபத்தி ஏழாவது வயதில் வனவாஸம் ஆரம்பமாயிற்று. அப்போது சீதைக்கு பதினெட்டு வயது. ஸ்ரீராகவன் வனவாஸத்திற்கு புறப்பட்டு முதல் மூன்று நாள் ஜலத்தைமட்டில் குடித்து உபவாஸம் செய்தார். நான்காவது நாள் பழங்களைத்தின்றார். ஐந்தாவது நாள் சித்ரகூடபர்வதம் சேர்ந்தார். பதின்மூன்றாவது வருடத்தில் பஞ்சவடியில் சூர்ப்பநகையை ஸ்ரீராகவன் விரூபம் செய்வித்தார். மாக சுத்த அஷ்டமியில் விருந்தமென்னும் முகூர்த்தத்தில் ராவணன் சீதையை அபகரித்து ஸீதையையும் ராமனையும் பிரித்தான். மாகசுத்த சதுர்தசியன்று சீதாபஹாரமென்று மற்றோர் பாடமுண்டு. அதற்கடுத்த மார்கசீர்ஷ சுத்த தசமியன்று ஜடாயுவின் சகோதரனான சம்பாதி சீதை அசோகவனத்திலிருப்பதாய் வானரர்களிடம் அறிவித்தது. ஏகாதசியன்று மகேந்திர பர்வதத்தினின்றும் ஹனுமார் கிளம்பி நூறுயோஜனம் சமுத்ரத்தைத்தாண்டினார். அன்றிரவே ஸீதையை ஹனுமார் கண்டார். த்வாதசியன்று சிம்சுபா விருக்ஷத்தில் ஹனுமார் தங்கியிருந்தார். அன்றிரவு சீதைக்கு விசுவாசம் ஏற்படும்படி ஹனுமார் பேசினார். த்ரயோதசியன்று அக்ஷகுமாரன் முதலியவர்களுடன் யுத்தம் செய்தார். அன்றுதான் அக்ஷகுமாரவதம் வனத்தை அழித்தது முதலியவை. சதுர்தசியன்று இந்திரஜித்தால் பிரம்மாஸ்த்ரத்தால் கட்டுண்டார். அன்றுதான் தன் வாலுக்குவைத்த நெருப்பால் ஹனுமார் லங்கையை தகனம் செய்தார். பௌர்ணமியன்று ஹனுமார் ஸமுத்திரத்தைத்தாண்டி இக்கரைக்கு வந்து சேர்ந்தார். மறுநாள் மார்கசீர்ஷ பஹுளப்ரதமைமுதல் 5 நாட்கள் வானரங்கள் திரும்பி வந்து ஷஷ்டியன்று மது வனத்தைத்வம்ஸம் செய்தனர். ஸப்தமியன்று



ஸ்ரீராகவனிடம் ஸீதா விருத்தாந்தத்தை அறிவித்து ஹனுமார் சூடாமணியை ஸமர்ப்பித்தார். அஷ்டமியன்று உத்தரபல்குனி நக்ஷத்திரத்தில் விஜயமென்னும் முகூர்த்தத்தில் மத்யான்ஹகாலத்தில் ஸ்ரீராகவன் வானர ஸைனியங்களுடன் லங்கையைக்குறித்துப் புறப்பட்டார். மார்கசீர்ஷ அமாவாசையன்று தக்ஷிண ஸமுத்ரக்கரை வந்து சேர்ந்தார். புஷ்ய சுத்த ப்ரதமை முதல் த்ருதீயைவரை ஸ்ரீராகவன் சைனியங்களுடன் ஸமுத்ரக்கரையில் தங்கியிருந்தார். சதுர்த்தியன்று விபீஷணன் வந்து சரணமடைந்தது. பஞ்சமியன்று ஸமுத்ரதரணத்திற்கு மந்த்ராலோசனை. பிறகு ஸ்ரீராகவன் நான்கு நாட்கள் ப்ராயோபவேசம் செய்ததும் ஸமுத்ரராஜன் நேரில் வந்து சேதுபந்தனம் செய்ய அனுமதித்ததும். புஷ்ய சுத்த தசமி ஸேதுபந்தனமாரம்பம். த்ரயோதசியன்று ஸேது கட்டிமுடிந்தது. சதுர்தசியன்று ஸ்ரீராகவன் ஸேதுவழியாய் லங்கைக்குச்சென்று ஸுவேலமலையின்மீது தங்கினார். பௌர்ணமி முதல் மூன்று நாட்கள் வரை ஸைனியம் ஸேதுவழியாய் கடலைத்தாண்டி இலங்கைவந்து சேர்ந்தது. புஷ்யபஹுள த்ருதியை முதல் தசமி வரை சைனியங்களை யுத்தத்திற்கு ஆங்காங்கு நிறுத்திவைத்தல். ஏகாதசியன்று சுகஸாரணன் வந்தது. த்வாதசியன்று ஸைனியங்களை கணக்கிட்டு பலாபலன்களை ஸாரணன் அறிவித்தது. த்ரயோதசி முதல் அமாவாசைவரை ராவணன் லங்கையில் தன் சைனியங்களை சித்தப்படுத்திக்கொண்டது. மாக சுத்தப்ரதமையன்று அங்கதன் தூது சென்றது. மாக சுத்த த்விதியை யுத்தமாரம்பமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

பாத்மபுராணம் சுக்லபக்ஷத்து ப்ரதமையன்று மத்யான்ஹத்தில் யுத்தமாரம்பமானதாய் அறிவிக்கிறது. சைத்ர சுத்த பௌர்ணமி ஸுவேலாரோஹணமென்றும் கிருஷ்ணபக்ஷத்து ப்ரதமை யுத்தமாரம்பமென்றும் சிலர் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். மாக சுத்த த்விதியை முதல் 7 நாட்கள் அதாவது அஷ்டமிவரை ஸங்குலயுத்தம். நவமியன்று இரவு இந்திரஜித் நாகபாசத்தால் ராமலக்ஷ்மணர்களை கட்டியது. தசமியன்று கருடபகவான் வந்து அதினின்றும் விடுவித்தது. தசமி முதல் 2 நாட்கள் வரை யுத்தமில்லை. த்வாதசியன்று ஆஞ்சநேயனால் தூம்ராக்ஷாஸுரனுடைய வதம். த்ரயோதசி அகம்பனனை அவர் கொன்றது. சதுர்தசி பௌர்ணமி மாக கிருஷ்ண ப்ரதமை மூன்று நாட்களும் ப்ரஹஸ்தனின் யுத்தமும், நீலனால் அவனுடைய ஸம்ஹாரமும். மாகபஹுள த்விதியை, த்ருதியை சதுர்த்தி இம்மூன்று நாட்களிலும் ராமராவண யுத்தமும் ராவணின் பலாயனமும். பஞ்சமி, ஷஷ்டி, ஸப்தமி, அஷ்டமி இந்த நான்கு நாட்களிலும் கும்பகர்ணனை எழுப்பியது. நவமி முதல் சதுர்தசிவரை கும்பகர்ணனின் யுத்தமும் ராகவன் அவனை சம்ஹரித்ததும். துக்கத்தால் மாகபாஹுள அமாவாசையன்று யுத்தம் நிறுத்தப்பட்டிருந்தது. பால்குண சுத்தப்ரதமை முதல்

சதுர்த்திக்குள் த்ரிசிரஸ், தேவாந்தகன், நராந்தகன், மகோதரன், மகாபார்ச்வன் இவர்களின் வதம். பஞ்சமி முதல் ஸப்தமி வரை அதிகாயனின் யுத்தமும் அவனுடைய ஸம்ஹாரமும். அஷ்டமி முதல் த்வாதசி வரை நிகும்பன் கும்பன் இவர்களின் சம்ஹாரம். பிறகு நான்கு நாட்கள் மகராக்ஷனின் யுத்தமும் அவனுடைய ஸம்ஹாரமும். பால்குண பஹுள த்விதியையன்று இந்திரஜித்துக்கு ஜயம். ராம லக்ஷ்மணாதிகள் எல்லோரையும் பிரம்மாஸ்திரத்தால் கட்டியது. த்ருதியைமுதல் ஸப்தமி வரை யுத்த நிறுத்தம். அச்சமயம் ஹனுமார் ஔஷதி பர்வதத்தைக் கொணர்ந்தது. த்ரயோதசி முதல் 6 நாள் இந்திரஜித்துடன் யுத்தமும் லக்ஷ்மணனால் இந்திரஜித் வதமும். சதுர்தசியன்று ராவணன் யுத்ததீக்ஷையைப் பெற்றது. பால்குண பஹுள அமாவாசையன்று ராவணனின் யுத்தத்திற்கு புறப்பாடு. சைத்ர சுத்த ப்ரதமைமுதல் பஞ்சமிவரை ராவணனுடைய மந்திரிமார்களின் வதம். ஷஷ்டி, ஸப்தமி அஷ்டமி மகாபார்ச்வாதிகள் கொல்லப்பட்டனர். நவமியன்று லக்ஷ்மணன்மீது ராவணன் சக்தி ஆயுதம்போட லக்ஷ்மணன் ப்ராணனைவிட்டது. ஆஞ்ஜனேயர் த்ரோணாசலத்தைக்கொணர்ந்து லக்ஷ்மணனை உயிர்ப்பித்தது. தசமியன்று யுத்த நிறுத்தம். ஏகாதசியன்று ஸ்ரீராகவனுக்கு மகேந்திரனுடைய ரதம் வந்தது. பிறகு 18 நாள் ஸ்ரீராகவனுக்கும் ராவணனுக்கும் த்வைரத யுத்தம். அதாவது மாக சுத்த த்வாதசி முதல் மாக பஹுள சதுர்தசிவரை ராமராவண யுத்தம். சதுர்தசியன்று ராவணஸம்ஹாரம்.

மாகபஹுள அமாவாசையன்று ராவணனுக்கு ப்ரேத ஸம்ஸ்காரம் நடந்தது. மாக சுத்த த்விதீயை முதல் சைத்ர கிருஷ்ண சதுர்தசிவரை 88 நாள் யுத்தமென்றும் அதில் 15 நாள் யுத்தமில்லாமலிருந்ததென்றும் 73 நாள்தான் யுத்தம் நடந்ததென்றும் தெரியவருகிறது. பால்குண பஹுளப்ரதமையில் யுத்தமாரம்பமாகி பால்குண அமாவாசையன்றே ராவண ஸம்ஹாரமானதாய் சில வியாக்யாதாக்கள் அபிப்பிராயப்பட்டிருப்பதில் அநேக பாதகங்களிருக்கின்றன. வைசாக சுத்த ப்ரதமையன்று ஸ்ரீராகவன் ஸுவேலாபர்வதத்திற்கு வந்தார். த்விதீயையன்று விபீஷணனுக்கு லங்காராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்தார். த்ருதீயைதினம் ஸீதை அக்னிப்ரவேசம் செய்ததும், தேவர்கள் நேரில்வந்து துதித்ததும் தசரதனின் பேட்டியும். சதுர்த்தியில் லங்கையிலிருந்து புஷ்பகவிமானத்தில் புறப்பட்டது. பதினான்கு வருஷம் முடிந்து பஞ்சமியில் ஸ்ரீராகவன் பரத்வாஜாசிரமத்திற்கு ஸீதாலக்ஷ்மண ஸமேதராய் ஹனுமத் சுக்ரீவ விபீஷண ப்ரமுக பக்தகோடிகளுடன் வந்து சேர்ந்தார். ஷஷ்டியன்று நந்திக்ராமத்தில் ஸ்ரீராகவனுக்கும் பரதனுக்கும் ஸமாகமும் ஜடாவிசோதனமும். வைசாக சுத்த ஸப்தமியன்று புஷ்யநக்ஷத்திரத்தில் ஸ்ரீராகவனுக்குபட்டாபிஷேக மகோற்சவம். அன்றே ஸ்ரீ ஆஞ்ஜனேயருக்கு முக்தா ஹாரத்தைத்தந்து அனுக்ரஹித்தது.

ஸ்ரீ ஸீதா ஸமேத ஸ்ரீராமசந்திர பரப்ரம்மணே நம:

சுபம்.



# ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழிபெயர்ப்பு.)

(பதின்மூன்றாவது அத்தியாயம்.)

(காபி ரைட்) முன் தொடர்ச்சி.

மகாக்ரூரனாய் கழுதை ரூபங்கொண்டிருந்த தேனுகாஸுரன் பலராமனால் கொல்லப்பட்டபின் அந்த தேனுகாஸுரனுடைய பனைதோப்பிலிருந்த எல்லா கழுதைகளும் மிகக்ரூரமாய் சப்தம் செய்துகொண்டு பலராமருடனிருந்த கராஸுரனின் சத்ருவான கிருஷ்ணனிடம் வந்து கிருஷ்ணனால் கொல்லப்பட்டன. விக்னேசுவரரின் வரத்தால் இதரர்களால் கொல்லமுடியாதவைகளான கழுதை உருவத்துடனிருந்த எல்லா அஸுரர்களையும் ஸம்ஹாரம் செய்து தடுக்கமுடியாத பராக்ரமம் பெற்றவனும் குணபூர்ணனும் ரமாபதியுமான கிருஷ்ணன் பழுத்திருந்த பனை நொங்குகளை கோபாலகர்களுக்குத் தின்னக்கொடுத்தான்.

பிறகு கோபாலகர்கள் இரு கக்ஷியாக நின்று குதிரை விளையாட்டு விளையாடிவரும்பொழுது பிரலம்பாஸுரனென்றவன் கம்ஸனால் அனுப்பப்பட்டு அங்குவந்தான். கிருஷ்ணனுடைய கக்ஷியைச் சேர்ந்தவர்கள் ஆட்டத்தில் கெலிக்க, தோற்றுப்போனவர்கள் குதிரையைப்போல் குனிந்து கெலித்தவர்களை குறித்த இடத்திற்கு தூக்கிக்கொண்டு போவதென்னும் வழக்கப்படி பாபியான ப்ரலம்பன் ஆட்டத்தில் தோல்வியடைந்து பலராமனிடம் வந்து பலராமனைத்தூக்கிப்போய் க்ரூரமான உருவங்கொண்டான். பிரலம்பாஸுரனுடைய அசுரரூபத்தைக்கண்டு பயந்துபோன பலராமரால் துதிக்கப்பெற்ற ஸ்ரீகிருஷ்ணன் பலராமருக்கு சக்திபூர்த்தி ஏற்படுவதன் நிமித்தம் தன்னுடைய சுக்லகேச ஆவேசத்தை அபிவ்யக்தப்படுத்தினார். அதனால் பலராமன் பூர்ணபலம் கொண்டவராய் ஆகாயத்தில் போய்க்கொண்டிருந்த பாபிஷ்டனான ப்ரலம்பாஸுரனை இருகக்கட்டிய முஷ்டியால் ஸம்ஹாரம் செய்தார். பிரலம்பனைக் கொன்றபிறகு தேவகணங்களும் கிருஷ்ணனும் மகா சந்தோஷங்கொண்டவர்களாய் ராம

னுக்கு பலதேவனென்று நாமகரணம் செய்தனர். எண்ணமுடியாத குணங்களுக்குக் கடலான ஸ்ரீகிருஷ்ணன் பசுக்களையும் கோபாலகர்களையும் கொளுத்தும் காட்டுத்தீயை இரண்டாம் முறையும் பானம் செய்தார். பிருந்தாவனத்தை மீண்டும் ஸம்ரக்ஷித்தார்.

## யக்ஞபத்தினிகளின் ஸத்காரம்

ஒரு ஸமயம் பிருந்தாவனத்திலிருந்து வெகுதூரம் சென்றிருந்த பக்தர்களின் இஷ்டப்ரதனை ஸ்ரீ கிருஷ்ணனைப்பார்த்து அவனுடைய தோழர்கள் நாம் பசியால் கஷ்டப்படுகிறோம், எங்களுக்கு போஜனம் வேண்டுமே என்று கேட்டனர். அப்பொழுது பரிபூர்ணமான எல்லா இஷ்டங்களையும் கொண்ட ஸ்ரீகிருஷ்ணன் இந்த வனத்தில் அநேக பிராம்மணர்கள் அநேகர்களை கர்த்தாவாய்க் கொண்ட ஸத்ரமென்னும் யக்ஞத்தை செய்கின்றனர், அவர்களிடம் சென்று அன்னத்தை யாசியுங்கள் என்று சொன்னார். கோபாலகர்கள் அந்த பிராம்மணர்களிடம் சென்று யாசித்துக் கேட்டும் அன்னத்தைப்பெறுமல் திரும்ப கிருஷ்ணனிடம் வந்தனர். பிறகு கிருஷ்ணன் நான் வந்திருப்பதாய் அவர்களின் பத்னிமார்களான யக்ஞபத்னிகளிடம் சொல்லி அன்னத்தை வேண்டுங்களென்று கோபாலகர்களிடம் சொன்னார். அப்படியே கோபாலகர்கள் யக்ஞபத்னிகளிடம் அறிவித்தனர். அந்த யக்ஞபத்னிகள் உடனே கிருஷ்ணனிடம் வந்து சேர்ந்தனர். பக்ஷ்யம், போஜ்யம், சோஷ்யம், லேஹ்யம், பேயம், காத்யம் ஆகிய ஆறு ரஸங்களுடன் கூடிய அன்னத்தை எடுத்துக்கொண்டு பர்த்தாக்கள் முதலான எல்லா பந்துக்களையும் விட்டு பகவானை பூஜிக்கவே, ஓரே கூட்டமாய் வந்த அந்த யக்ஞபத்னிகளை அனுக்ரஹித்து கிருஷ்ணன் அவர்களுடைய வீட்டுக்கு அனுப்பித்தார். அவர்களில் ஒரு ஸ்திரீ அவளுடைய பர்த்தா போகவேண்டாமென்று நிர்பந்திக்கவும் உடனே யோகாப்யாஸத்தால் அந்த சரீரத்தை விட்டு விஷ்ணு லோகத்தை அடைந்தாள். பிறகு எல்லா ஜகத்திற்கும் நாதனை கிருஷ்ணன் கோபாலகர்களுடன் சேர்ந்து யக்ஞபத்னிகள் கொடுத்துப் போன அன்னத்தை போஜனம்செய்து கோகுலத்திற்கு வந்து ஸந்



தோஷமடைந்தார். அந்த யக்ஞத்தைச் செய்த பிராம்மணர்கள் பகவானுடைய ஆக்ஞையை மீறியதாகிய தங்கள் குற்றத்தை எண்ணிமனதில் மிகவும் சங்கடப்பட்டனர்.

## கோவர்த்தனோத்தாரம்.

பிறகு கிருஷ்ணன் இந்திரனை உத்தேசித்து செய்யும் யக்ஞத்திற்காக செய்து வரும் எத்தனத்தைப் பார்த்துவிட்டு இந்திரனுக்கு தன்னுடைய ஞாபகம் ஏற்படுவதற்காக அதைத்தடுத்தார். நாசமில்லாதவனும் திறமை யுள்ளவனுமான ஸ்ரீ கிருஷ்ணன் மகேந்திரன் தன்னை ஓர் மனுஷ்யனென்று எண்ணலாகாதென அந்த இந்திரோத்தேச யக்ஞத்தைக் கெடுத்தார். பர்வதத்தை உத்தேசித்து யாகம் செய்வதுதான் எங்களுடைய முக்ய தர்மமென்று சாக்கைச்சொல்லி இந்திரனை உத்தேசித்து யாகம் செய்ய எத்னப்பட்டிருந்த நந்தகோபாதிகளை பர்வதோத்தேசமான யாகத்தைச் செய்வதில் ப்ரவிருத்தி ஏற்படும்படி செய்து கிருஷ்ணன் மிகவும் விசாலமான பர்வதத்தின் சரீரத்தையே எடுத்து பலவகையான அன்னம் ரஸம் பானம் இவைகளுடனுள்ள பலியை சுயம் உட்கொண்டார். பர்வதோத்தேசமாக நடந்த யக்ஞம் முடிந்தபின் இந்திரன் ஸ்ரீகிருஷ்ணர் பகவானுடைய அவதாரமென்பதை மறந்து மிகவும் அதிகமாய் உத்கிருஷ்டமான படி மழை பெய்ய பிரளய காலத்திய மேகங்களை ஆக்ஞாபித்தார். இந்திரனால் தூண்டப்பட்ட அந்த மேகங்கள் எல்லா கோசமூங்களையும் நாசம் செய்வதற்காக பெரிய யானை துதிக்கைகளைப் போல் மொத்தமாய் உதகதாரைகளை பெய்தன. பத்மநாபனை கிருஷ்ணன் அந்த ஜலதாரைகளால் கஷ்டப்பட்ட எல்லா பிருந்தாவனத்தையும் பார்த்து தாமரை இதழ்போன்ற கோமலமான இடதுகையாலேயே கோவர்த்தன பர்வதத்தைப் பிடுங்கி திடமாய் தரித்தார். அந்த பர்வதத்தின் கீழே எல்லா கோபாலகர்களும் தங்கள் பசுக்களுடன் ப்ரவேசம் செய்தனர். ஏழுநாள் வரை சற்றும் விடாமல் மழையை பெய்யச் செய்தும் ஸ்ரீ கிருஷ்ணன் சிரமமில்லாமல் கோகுலத்தை சம்ரக்ஷணம் செய்ததைப் பார்த்து ஸ்ரீ கிருஷ்ணர் பகவான் நாராயணனுடைய அவதாரமென்பது

அவனுடைய ஞாபகத்திற்கு வந்து கிருஷ்ணனுடைய பாதாரவிந்தத்தை சரணமடைந்தார். வஜ்ஜிரதாரியாய் ஆயிரக்கண் படைத்த இந்திரன் ஸுராபி முதலான கோசமுகங்களுடன் வந்து கணக்கற்ற பூர்ணமான குணங்களுக்கு சமுத்திரனும் பரமசிவனுக்கு குருவான பிரம்மாவுக்கும் ஞானத்தைத் தருபனும் அபரிமிதமான காந்தியுடனிருப்பவனும் உத்தமோத்தமனுமான கிருஷ்ணனை உபநிஷத்திலுள்ள வாக்யங்களால் ஸ்தோத்திரம் செய்தார். கிருஷ்ணா! கணக்கற்ற தேஜஸ்ஸு உள்ள உன்னிடமிருந்து எல்லா ஜகத்தும் உண்டாகிறது. நீயே அதை சம்ரக்ஷிக்கிறாய். முடிவில் நீயே எல்லா ஜகத்தை பக்ஷிக்கிறாய். உன்னிடமிருந்தே ஜகத்துக்கு ஸம்ஸாரம், பந்தம், மோக்ஷம் உண்டாகிறது. பூர்ண சக்தியுள்ள கிருஷ்ணா! உனக்கு ஸமமானவன் எந்த காலத்திலேயும் எந்த தேசத்திலேயுமில்லை. சமர்த்தனான கிருஷ்ணா! என்னுடைய அவிவேகத்தை நீதான் க்ஷமிக்கவேண்டும். நான் உன்னை எப்பொழுதும் ஆசிரயித்திருக்கிறேன். இப்படி தேவேந்திரனால் ஸ்தோத்திரம் செய்யப்பட்ட ரமாபதியான ஸ்ரீ கிருஷ்ணன் ஹே இந்திரா! உன்னுடைய அவிவேகத்தை நான் எப்பொழுதும் க்ஷமித்திருக்கிறேன். ஆயினும் உன்னை ஸன்மார்க்கத்தில் பிரவிருத்திக்கச் செய்வதற்காக, உன்னை உத்தேசித்துச் செய்யும் யக்ஞத்தை அபஹாரம் செய்தேனென்று சொன்னார். ஸுராபி முதலான கோசமூகத்திற்கு யஜமானனான இந்திரன் ஆகாச கங்கையின் ஜலத்தால் கிருஷ்ணமூர்த்தியை அபிஷேகம் செய்து குணபூர்ணனும் கோவிந்த என்ற பெயர் பெற்றவனுமான கிருஷ்ணபகவானை நமஸ்கரித்துவிட்டு தன்னுடைய லோகத்திற்கு புறப்பட்டுபோனான். ஸ்ரீகிருஷ்ணன் ஓர் மனுஷ்யனென்ற சந்தேகம் கோவர்த்தன பர்வதத்தை தரித்திருந்ததால் நிவிருத்தியடைந்த கோபாலகர்கள் வேதங்களுக்கு ஸ்வாமியான ஸ்ரீகிருஷ்ணனை எதிர்கொண்டு வந்து நமஸ்கரித்தனர். கிருஷ்ணன் நாராயணனுக்கு ஸமனென்று அவருடைய நாமகரண காலத்தில் கர்காசாரியார் சொல்லியிருக்கிறார் என்று நந்தகோபன் சொன்னதை கேட்டு கோவர்த்தனோத்தாரம் முதற்கொண்டு கோபாலகர்கள் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை நாராயணனென்றே அறிந்து கொண்ட-



னர். கமலநேத்ரனான கிருஷ்ணனிடம் அவர் ஸர்வோத்தமரென்ற ஞானத்துடன் அவரை பூஜித்தனர். ஸுப்ரம்மண்யன் தந்த வரத்தால் மரணமில்லாதவனும் பலிஷ்டனுமான ப்ரலம்பாஸுரனை ஸம்ஹாரம் செய்ததைக்கண்டு கோபாலகர்கள் பலராமன் தேவோத்தமனென்று நிச்சயித்தனர். கிருஷ்ணனுக்கு பின் பலராமனுக்கு உத்தம பூஜையை செய்தனர்.

## கோபிகா ரமணம்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தான் பதியாக ஆகவேண்டுமென்று துர்கையின் உத்தேசம் விரதத்தைச் செய்தவர்களான கோபிகன்னிகைகளை விவாகம் செய்துகொண்டார். மன்மதனுடைய பாணத்தால் தூண்டப்பட்டவர்களாய் சந்திரனால் விளங்கிடும் இராத்திரிகாலங்களில் தன்னுடைய சமீபத்தில் வந்து கூடியவர்களான கோபாலகர்களை விவாகம் செய்துகொண்ட இதர கோபிகளை ஸ்ரீ கிருஷ்ணர் சந்தோஷப்படுத்தினார். இந்த பிருந்தாவனத்தில் விவாகம் செய்துகொண்ட கோபகன்னிகைகளிடம் நாராயணனென்ற நாமம் படைத்த பலிஷ்டர்களான பத்துலக்ஷம் கோபாலகர்கள் ஸ்ரீ கிருஷ்ணரால் உற்பத்தி செய்யப்பட்டனர். இவர்களெல்லோரும் அவர்களுடைய தந்தையான கிருஷ்ணனிடம் பக்தி செய்வதற்காக கிருஷ்ணபுத்ராளாக வேண்டுமென்று தேவதாஸமூகங்கள் பூமியில் பிறந்தனர். அவர்களுக்கு பூர்வ ஜன்மத்திலேயே வரனைக்கொடுத்துவிட்டபடியால் பலராமனுக்கும் உபநயனமாவதற்கும் முன்பே, ஸமஸ்த அபீஷ்டங்களை அளிப்பதில் சிந்தாமணியாயிருப்பவரும் தோஷ சம்பந்த மில்லாதவரும் ரமாபதியுமான பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஸமஸ்த கோபிகளையும் சந்தோஷப்படுத்தினார். ஷோடசகலா பூர்ணமான சந்திரனின் கிரணங்களால் பிரகாசித்த சரத்கால ராத்ரியில் சன்ன மல்லிகை ஆம்பல் இந்த குஸுமங்களின் நறுமணமுள்ள மந்த மாருதம் வீசும் பிருந்தாவனத்தில் ஸ்ரீ கிருஷ்ணமுகத்தினின்றும் புறப்பட்ட உயர்தர கானத்தைக்கேட்டு கோபிகைகள் மோகமடைந்தனர். அவர்கள் கூடியிருந்த இடத்திற்கு ஓர் யக்ஷன் வந்து சேர்ந்தான். அவனுடைய பெயர் சங்கசூடாஸுரன். இந்திர

னுடைய ப்ரஸாதத்தால் அவன் ஸம்ரக்ஷணை பெற்றவன். ருத்திரனின் சகாவான குபேரனின் ப்ருத்யன். பலிஷ்டன். அவன் கோபிகளை விரட்டிக்கொண்டுவர பகவான் உள்ளங்கையால் அவனை அறைய அவன் மரணமடைந்தான். அவனுடைய தலையிலிருந்த மாணிக்கத்தை ஸ்ரீ கிருஷ்ணர் அபகாரம் செய்தார்.

## இதர அஸுரர்களின்வதம்.

ஸ்ரீ கிருஷ்ணருக்கு விரோதமாய் காரியங்களைச் செய்து கொண்டு பரமசிவனின் வரத்தால் இதரர்களால் கொல்லமுடியாதவனும் எப்போதும் கம்ஸனுக்கு அனுகூலமாயிருப்பவனுமான அரிஷ்டாஸுரன் காளை உருவத்துடன் பிருந்தாவனத்திற்கு வந்தான். பசுமாடுகளை பயமுறுத்தும் இந்த அரிஷ்டாஸுரனை ஸ்ரீ கிருஷ்ணன் சண்டைபோட அழைத்தான். அவன் க்ரூரமான கொம்புகளின் முனைகளை முன் நீட்டிக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணரிடம் வந்து சேர்ந்தான். சாமர்த்தியம் வாய்ந்த ஸ்ரீ கிருஷ்ணர் அவனுடைய கொம்புகளை பிடித்துக்கொண்டார். உத்தமமான பலத்துடன் கூடிய ஸ்ரீகிருஷ்ணர் க்ரூரமான வீரியமுள்ள விருஷபாஸுரனை பூமியில் கிடத்தி யக்ஞத்தில் பசுவைக் கொல்லுவதுபோல் கொன்றார். கம்ஸனால் அனுப்பப்பட்டு பார்வதியின் வரத்தால் மரணமில்லாதவனும் ஸதாபாபிஷ்டனுமிருந்த கேசி என்றவன் ஸ்ரீகிருஷ்ணனிடம் வந்தான். பகவான் கிருஷ்ணர் கேசியின் வாயில் தன்னுடைய பாஹுவை நுழைக்கவிட்டார். அந்தபுஜம் கேசியின் சரீரத்துக்குள் வளர்ந்தது. அவன் கிருஷ்ணருடைய புஜத்தைக்கடிக்க பிரயாசை எடுத்துக்கொண்டான். ஆயினும் அது முடியாமல் அவனுடைய பற்கள் வாய் உதடு இவைகள் பிளந்துபோய் மூச்சுவிடமுடியாமல் திணறி சரீரம் இருபாகமாய் பிளந்துபோய் பிராணனை விட்டு கீழே விழுந்தான். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணனை பிரும்மாருத்திரன் இந்திரன் சூரியன் முதலிய எல்லா தேவர்களும் ஸ்தோத்திரம் செய்தனர். பிரம்மாவினின்றும் தீர்க்காயுளை ஸம்பாதித்துக்கொண்டிருந்த மயாஸுரனின் மகனான வ்யோமாஸுரனென்பவன் எல்லா கோபாலகர்களையும் குஹையில் போட்டான். தேவஸிரேஷ்டனும் லக்ஷ்மீபதியுமான ஸ்ரீ கிருஷ்ணர் வ்யோமாஸுரனை பசுவை அடிப்பதுபோல் அடித்து எல்லா கோபாலகர்களையும் குஹையிலிருந்து வெளியாக்கினார்.



## மதுரைக்கு பிரயாணம்

அபரிச்சின்னமான சக்தியுள்ள ஸகலலோக நாதனான ஸ்ரீ கிருஷ்ணர் கோகுலத்திலிருந்துகொண்டு இதரர்களால் செய்ய முடியாததான காரியத்தைச் செய்துவரும்பொழுது பிரம்மாவின் துடையிலிருந்தும் பிறந்தவரான நாரதர் தேவகாரியம் நடைபெறச் செய்வதற்காக கம்ஸனிடம் வந்து, வஸுதேவன் சிசுவான கிருஷ்ணனை கோகுலத்தில் விட்டுப்போய் அங்கு நந்தகோபனுடைய பெண் குழந்தை துர்க்கையை எடுத்துப்போனது முதலான எல்லா விருத்தாந்தங்களையும் சொன்னார். இந்த சமாசாரங்களைக் கேட்டு மிகுந்த கோபவேகத்தால் சரீரம் நடுங்கிக்கொண்டு, க்ரூரமான காரியங்களைச் செய்யும் கம்ஸன் தேவகியுடன் சேர்ந்த வஸுதேவனை காலில் விலங்கிட்டபின் பலராமனுடனுள்ள ஸ்ரீ கிருஷ்ணனை கோபாலகூட்டங்களுடன் கூடி ரதத்தில் அழைத்துக் கொண்டுவர சீக்கிரமே அக்ரூரனுக்கு ஆக்ஞையிட்டான். பூர்வம் சிசோரனென்ற தேவகந்தர்வன் ஸ்வாயம்புமனுவின் அம்சத்துடன் பிரம்மாவின் ஆவேசத்துடன் சேர்ந்து ஸ்ரீகிருஷ்ணஸேவார்த்தமாக ஞானியாய் அக்ரூரனென்று பிறந்தான். அந்த சிசோரனென்ற கந்தர்வன் பகவத் விஷயமான எல்லோராலும் பூஜிக்கக் கூடிய காரியங்களுள்ளவனாய் அக்ரூரனென்று யாதவர்களில் பிறந்தான். கம்ஸனுடைய மந்திரியான அந்த அக்ரூரன் கம்ஸனால் ஆக்ஞாபிக்கப்பட்டு கிருஷ்ணதரிசனம் ஏற்படப்போகிறதென்று ஆனந்தபூர்ணமான மனமுடையவனும் கிருதார்த்தனுமானான். அக்ரூரன் கம்ஸனுடைய ரதத்திலேறிக்கொண்டு சதுர்முகனால் வணங்கப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதாரவிந்தத்தை அவிச்சின்னமாய் வழிநெடுக த்யானம் செய்துகொண்டு பிருந்தாவனம் வந்து சேர்ந்தான். பிருந்தாவனத்தினருகில் பகவானுடைய பாதசின்னம் பதிந்திருந்த இடங்களைப்பார்த்து பரமானந்தப்பட்டார். ஜகதீசனான ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரணஸம்பந்தத்தால் ஆதிக்கம் பெற்றதால் ஸமஸ்த பாபங்களை பரிகரிக்கக்கூடியதும் பிரம்மா ருத்திரன் இந்திரன் முதலான மன்மதாதிதேவர்களின் கிரீடத்திலுள்ள மாணிக்கங்களாகிற கண்களுக்கு விஷயமுமான அந்தபிருந்தாவனப்புழுதிகளில் அக்ரூரன் பிறண்டான்.

மாட்டுக்கொட்டலில் பசுக்களை சுயம் கரந்து கொண்டும் இதரர்களால் கரக்கச்செய்துகொண்டு மிருந்துவந்த அண்ணாவுடன் கூடிய ஜகத்தின் முக்கிய குருவான ஸ்ரீ கிருஷ்ணனைக் அக்ரூரன் கண்டான். ஆனந்த பூர்ணமான சரீரமுள்ளவனும் நாசரகிதனுமான ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்து சந்தோஷமடைந்தவனாய் புருஷோத்தமனான ஸ்ரீ கிருஷ்ணனின் பாதத்தில் விழுந்தான். யதுபதியான கிருஷ்ணர் அக்ரூரனை எழுப்பி பலராமனுடன் சேர்ந்து அவனை தன்னுடைய வீட்டிற்கு அழைத்துவந்து அக்ரூரனுக்கு ஷோடசோபசாரங்களையும் செய்து நித்யமும் ப்ரகடமடைந்ததும் குறைவற்றதுமான ஞானத்துடனிருப்பினும் உலகத்தாரை அனுகரணம் செய்துகொண்டு அக்ரூரனின் வாயினின்றும் மதுரா பட்டணத்தின் பூராசமாசாரங்களையும் கேட்டறிந்தார். கமலநாபனான ஸ்ரீ கிருஷ்ணர் கம்ஸனுடைய அபிப்பிராயத்தைக் கேட்டு காலையில் கோபாலகர்களுடன் ரதமேறினார். நாசரகிதமான ஸ்வரூபமுள்ள ஸ்ரீ கிருஷ்ணர் பலராமன் அக்ரூரன் இவர்களுடன் கூடி அந்த ரதத்துடன் யமுனையின் கரைக்கு வந்தார். ச்வபல்கன் என்பவனின் குமாரனான அக்ரூரன் ஜகத்தால் வணங்கப்படுகிறவர்களான கிருஷ்ண ராமர்களை சிரேஷ்டமான ரதத்தில் உட்கார்த்திவைத்துவிட்டு சீக்கிரமே யமுனையில் இறங்கினான். அங்கு விதிப்படி ஸ்நானம் செய்து அகமர்ஷண மந்த்ரத்தை ஜபிக்க அக்ரூரன் அந்த மடுவில் ஆதிசேஷனின் ஆஸனத்தில் உட்கார்ந்த ஸ்ரீ கிருஷ்ணனைக் கண்டான். அகமர்ஷண மந்த்ரத்தின் ஸித்தியுள்ளவனும் தானபதி எனப்பெயர்கொண்டவனுமான அக்ரூரன் தினந்தோறும் ஆதிசேஷனைப் பார்த்திருந்தார். அன்று பாலரூபியான ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியும் சேர்ந்ததைக்கண்டார். ஸ்ரீ கிருஷ்ணனைக்கண்டவுடன் ரதத்திலிருந்த கிருஷ்ணன் அங்கு இல்லையோவென்று யோஜித்து ரதத்தை நோக்கிவந்தான். அந்த ரதத்திலேயும் ஸ்ரீ கிருஷ்ணர் உட்கார்ந்திருந்ததைக்கண்டு அக்ரூரன் மறுபடியும் யமுனையின் மடுவில் மூழ்கினான். அந்த மடுவில் ஆதிசேஷனின் சரீரத்தில் சயனித்திருந்து பிரம்மா ருத்திரன் இந்திரன் முதலான தேவோத்தமர்கள் ரிஷிச்ரேஷ்டர்கள் இவர்களின் கூட்டம் நமஸ்காரம் செய்யும் இருபாதங்களுள்ள



லக்ஷ்மீஸமேதரான ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைக்கண்டான். அந்த அக்ரூரன் நாசமற்றவரான அந்த பத்மநாபனை உத்தமமான ஸ்தோத்திரங்களால் ஸ்தோத்திரம் செய்ய ஸ்ரீ கிருஷ்ணன் அந்த ஜலத்தில் மறைந்தபின் ரதத்திலேறினான். அந்தமில்லாதவரான ஸ்ரீ கிருஷ்ணன் அக்ரூரனுடனும் பலராமனுடனும் சேர்ந்து சாயங்காலம் மதுரா பட்டணம் வந்து சேர்ந்தார். (தொடரும்.)

## செய்தித்திரட்டு.

தென்னார்க்காடு ஜில்லாவைச்சேர்ந்த குஞ்சும்மேடுகிராமம் ஸத்வைஷ்ணவர்களான மாத்வர்களின் கிராமமென்பதும் அங்கு ஸ்ரீ கோபாலகிருஷ்ணஸ்வாமி ஸ்ரீ ஆஞ்சனேயர் ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமி இவர்களின் கோயில்கள் விளங்கிவருகின்றன வென்றும் இவைகளுக்காக பலவகை சொத்துக்களிருக்கின்றன வென்றும் அடிக்கடி இந்தக் கோயில்களில் திருடர்கள் புகுந்து பிம்பங்களைத்தொட்டு அங்கு சாத்தப்பட்டிருந்தவைகளைக் களவாடிச்சென்றும் அந்தந்த கோயில் அதிகாரிகள் அவைகளுக்கு ஸம்புரோக்ஷணம் முதலியவை யாதொன்றும் செய்யாமல் வழக்கப்படியுள்ள பூஜாதிகள் நடத்தப்பட்டு வருகின்றனவென்றும் சூத்ரஸ்பர்சாதிகளால் ஏற்பட்ட தோஷங்களைப் போக்காமல் தினம் செய்யப்படும் பூஜாதிகள் அசாஸ்திரீயமானதால் இதைப்பற்றி அக்கிராமத்தாரும் கோயிலதிகாரிகளும் கவனித்து சீக்கிரமே ஸம்புரோக்ஷணாதிகளைச்செய்ய ஏற்பாடு செய்ய கிளர்ச்சி செய்யப்படவேண்டுமென்றும் ஓர் நிருபர் அறிவிக்கிறார்:

திருக்கோயிலூர் தாலூக்கா வடமருதூர் கிராமத்தில் மாத்வ பக்தர்களால் 15—4—32 முதல் 24-4—32 முடிய மூன்றாம் வருடத்திய ஸ்ரீ ராமநவமி மகோற்சவம் கொண்டாடப்பட்டதென்றும் பிரதி தினம் காலையில் சுந்தரகாண்டபாராயணம் லக்ஷார்ச்சனை ஹரிபஜனை பிராம்மண போஜனம் மாலையில் ஹரிபஜனை மங்களார்த்தி இவைகள் நடந்துவந்தன வென்றும் 23உ யன்று மாலை 5-மணி முதல் 7-மணி வரை கடலூர் வக்கீல் ஸ்ரீமான் R. பூவராகமூர்த்தி ராவ் B. A. B. L. அவர்களால் ராமநாம பஜனை செய்து ஸ்ரீ ர்கவனை பூஜிப்பதால் உண்டாகும் நன்மைகளைப்பற்றி ஸமஸ்கிருத சுலோகங்கள் தாஸர்பதங்கள் இவைகளின் ஆதார பூர்வமாய் வெகு அழகாய் உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் இரவு 8-மணிக்கு ஸ்ரீமுஷ்ணம் பாகவதர் ஸ்ரீமான் புராணம் வெங்கடரம

ஞசாரியாரால் சுபத்திரா கல்யாணம் ஹரிகதா காலக்ஷேபம் நடத்தப்பட்டதென்றும் 24வ யன்று ஸ்ரீராம பட்டாபிஷேக மஹோத்சவம் வெகு சிறப்பாய் சுமார் 250 பேர்களுக்கு பிராம்மண போஜனத்துடன் நடத்தப்பட்டதென்றும் அன்று மாலை 5-மணி முதல் 8-மணி வரை வீழ்சோழபுரம் தர்க்க வித்வான் கிருஷ்ணுசாரியார் அவர்களால் வைஷ்ணவர்களின் கடமை என்பதைப்பற்றி வெகு தெளிவாய் கன்னடத்தில் உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் இரவு 10-மணிக்கு முத்துப்பல்லக்கில் வாத்ய கோஷங்களுடனும் பாணவேடிக்கைகளுடனும் ஹரிதாஸ் பஜனையுடனும் ஸ்ரீ ராமகிருஷ்ண படங்களின் ஊர்வலம் நடத்தப்பட்டதென்றும் இவ்வுற்சவத்திற்காக கடலூர் வக்கீல்கள் ஸ்ரீமான்களான P. R. நாராயண ராவ் R. பூவராகமூர்த்திராவ் C. V. நாராயணசாமி அய்யர் முதலிய அநேக கனவான்கள் திருக்கோவிலூர் விழுப்புரம் வீரசோழபுரம் முதலான இடங்களிலிருந்து விஜயம் செய்திருந்தனரென்றும் வடமருதூரிலிருந்து ஸ்ரீமான் R. கிருஷ்ணஸாமி ராவ் அறிவிக்கிறுர்.

நமது பரதகண்டத்தின் வடபாகத்திலுள்ள மகா புண்ணிய க்ஷேத்திரங்களாகிய காசி, கயா, ப்ரயாகம், முதலிய இடங்களுக்கு சுமார் 20 வருஷங்களுக்கு முன் விஜயம் செய்திருந்த ஸ்ரீ உத்தராதிமடம் ஸமஸ்தாளுதிபதி ஸ்ரீமத் ஸத்யத்யான தீர்த்த ஸ்ரீ பாதாள் மறுமுறை விஜயம் செய்யப்போவதாய் வெகுநாளாய் வதந்தி உலாவிக்கொண்டிருந்ததற்கு தகுந்தபடி தக்ஷிண தேசயாத்திரைகளை முடித்துக்கொண்டு தமது பரிவாரங்களுடனும் ஸ்ரீ உடுபி ஸுப்ரமண்யம் மடத்தின்ஸ்வாமிகள் ஸ்ரீஉடுபி சீரூர் மடத்தின் ஸ்வாமிகள் இவர்களுடன் ஸ்ரீ உத்திராதிமடம் ஸ்வாமிகள் (27–4—32)வ புதவாரம் கயாக்ஷேத்திரம் விஜயம் செய்திருப்பதாயும் கூடிய சீக்கிரம் ஸ்ரீ காசிக்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்யப்போவதாயும் இங்கு துவைதாத்வைத விசார சம்பந்தமாய் பெரியதொரு சபை கூட்டப்போவதாதயும் அதற்கென இவ்வூர் பிரபல பண்டிதர்கள் ஆயத்தமாக இருப்பதுடன் பரதகண்டத்தின் பலபாகங்களிலிருந்து வைஷ்ணவ மடத்தைச்சேர்ந்த பக்தர்கள் இங்கு இப்போது முதற்கொண்டு கூடிவருவது பெரும் காக்ஷியாக இருக்கிறதென்றும் இந்தக்ஷேத்திரத்தில் விஜயம் செய்யும் பொழுது ஹனுமந்த கட்டத்திலுள்ள ஸ்ரீ கிருஷ்ணமந்திரமென்றழைக்கப்படும் ஸ்ரீ உத்திராதி மடத்தின் கட்டிடத்திலேயே ஸ்ரீஸ்வாமிகள் தங்கியிருந்து இக்கட்டிட சம்பந்தமாய் இங்கு நடந்துவரும் கக்ஷிவாதங்களை ஒழித்துப்போட்டு எல்லோரும் ஏகோபிக்கச் செய்யவேண்டுமென்றும் ஹைதராபாத் ஸ்ரீரங்கவரம் வெங்கட்டராவ் இந்த கட்டிடத்தில் ஸ்ரீ



கிருஷ்ணனை ப்ரதிஷ்டைசெய்து 1928ஹூத்தில் அவர் சரீரத்தை விடும் சமயம் இந்த கட்டிடத்தை ஸ்ரீ உத்திராதி மடத்துக்கே தானம்செய்து விட்டதை எல்லோரும் ஒப்புக்கொண்டதே என்றும் அந்த கட்டிடத்தில் ஸ்ரீராகவனுடைய திவ்ய தரிசனத்தை அளித்து பக்தகோடிகளை ஸ்ரீ ஸ்வாமிகள் அனுக்ரஹிப்பார்களென்று காசி க்ஷேத்திரவாசிகள் எதிர்பார்க்கிறுர்களென்றும் காசி ஹனுமந்த கட்டத்திலிருந்து ஸ்ரீமான் S. நாகராஜ ராவ் அறிவிக்கிறுர்.

ஸ்ரீ வியாஸராஜ மடத்து ஸ்வாமிகள் தக்ஷிண தேசசஞ்சாரம் செய்ய மைசூர் மாகாணத்தைவிட்டு புறப்பட்டுவிட்டதாயும் அவர்களுக்குத் தேவையான சௌகரியங்களை செய்து கொடுக்க மதராஸ் கவர்ண்மெண்டை மைசூர் கவர்ண்மெண்டார் கேட்டுக்கொண்டு மதராஸ் கவர்ண்மெண்டார் ஆங்காங்கு ரிவினியூ டிபார்ட்மெண்டாருக்கு உத்திரவு அனுப்பியிருப்பதாயும் 28–5—32வ யன்று நடக்கவேண்டிய இவ்வருடத்திய மகா சமாராதனை உற்சவத்தை ஸ்ரீஸ்வாமிகள் ஸத்யமங்கலத்தில் நடத்தப்போவதாயும் நம்பத்தகுந்த செய்தி எட்டியிருக்கிறது.

முசிரிதாலூக்காவைச் சேர்ந்த உமையாள்புரம் ஸ்ரீ ஆஞ்ஜனேய ஸ்வாமி கோயிலில் சுமார் 2ஹூ காலமாய் அவ்வூர் மாத்வர்களால் மாத்வ ஸம்பிரதாயப்படி பிரதி சனிக்கிழமை ஏகாதசியும் ஹரிபஜனை நடத்தப்படுகிறதென்றும் அந்த பஜனை சமாஜத்தார் வெளியூர்களிலிருந்து திரவியங்களை வசூல் செய்து இவ்வருடம் ஸ்ரீராமநவமி மஹோற்சவம் நடத்தினரென்றும் ஸ்ரீராமநவமி யன்று பகலில் ஸ்ரீ ஆஞ்ஜனேயருக்கு பஞ்சாமிருத அபிஷேகம், ஸ்ரீமத்ராமாயண பாராயணம் பிராம்மணசந்தர்பணையும் இரவில் ஹரிபஜனையும் அவ்வூர் ஸ்ரீமான் குப்பாசாரியாரால் ஸ்ரீ ராமாவதாரத்தைப்பற்றி அரியதோர் உபந்யாஸமும் நடைபெற்றதென்றும் பிறகு 10-நாள் ஜனஞேற்சவம் சிறப்பாக நடைபெற்று. 24–4–32 தேதி யன்று ஊர்வலமும் நடத்தப்பட்டதென்றும் இச்சமயம் ஸ்ரீஸ்ரீ தாராபுரம் ஸ்வாமிகள் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தகுந்ததென்றும் அம்மடத்தின் ஸ்ரீ நாராயணதாஸர் செய்து வந்த பஜனை உற்சாகத்தைக் கொடுத்து வந்ததென்றும் ஸ்ரீமான்களான R. ராஜகோபால ராவ், R. S. வாஸுதேவ ராவ், S. கிருஷ்ண ராவ், வெங்கடகிரி ஆசாரியார், ரங்கப்பாசாரியார், A சேதுராவ், இவர்கள் அறிவிக்கின்றனர்.

கும்பகோணம் ஸ்ரீ விஜயீந்திர ஸ்வாமிகளின் ஆராதனை பிராம்மண போஜன காலத்தில் ஓர் பக்ஷ்யத்தை வழங்க இந்நகரில் ஏற்பட்டிருக்கும் ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகள் ஆராதனை கைங்கரிய ஸபாவின் 3வது வருஷத்

திய வரவு சிலவு ரிபோர்ட்டிலிருந்து சென்ற வருஷத்திய வசூல் ரூ. 91—2—3 என்றும் சிலவு ரூ. 87—14—9 என்றும் கையிருப்பு ரூ. 29-7-10 என்றும் தெரியவருகிறது. இவ்வருஷத்திய ஆராதனை மகோற்சவத்தில் ஸ்ரீ ராகவேந்திர ஸ்தோத்திரம் ஸ்ரீவிஜயீந்திர ஸ்தோத்திரம் ஸந்த்யாவந்தனம் இவைகளை சரியாய் சொல்லும் சிறுபையன்களுக்கு மூன்றுப்ரைஸ்ஸுகள் கொடுக்க ஐந்து ரூபாயை இந்த ஸபையார் ஒதுக்கி வைத்திருப்பதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ரிபோர்ட்டில் ஆராதனை காலத்தில் இன்ன பக்ஷயம் செய்யப்பட்டதென்றும் இத்தனைபேர்களுக்கு வழங்கப்பட்டதென்றும் விபரமாய் அறிவிக்காம்தது சில்லரை சாமான்களாகிய அகப்பைகளை முதற்கொண்டு கணக்கில் காட்டி பெரும் தொகையான ரூ. 54—14—6 ஐ மளிகை சாமான்களென்று மட்டில் மொத்தமாய் அறிவித்ததும் சரியான வரவு சிலவு கணக்கைக் காட்டுவதாயில்லை என்று சிலர் சொல்வதால் அடுத்த வருஷத்திய ரிபோர்ட்டில் அவ்வகை புகாருக்கு இடமில்லாமல் இசச்பையார் நடந்துகொள்வாராக.

மதராஸ் திருவடீசுவரன் பேட்டையில் ரிடையர்ட் ஸப்ஜட்ஜ் ஸ்ரீமான் ராவ்பகதூர் D. ராகவேந்திர ராவ் B. A. B. L. அவர்களை அக்கிராசனராகவும் N. ராமராவ் அவர்களை காரியதரிசியாகவும்கொண்ட ஸ்ரீ ஆஞ்ஜனேய பக்த ஜனநிதியின் இவ்வருஷத்திய ரிபோர்ட்டில் வருட ஆரம்பத்தில் 74 மெம்பர்களிருந்ததாகவும் தற்போது 110 மெம்பர்களும் 909ரூ ஷேர் மூலதனமிருப்பதாகவும் இந்த நிதி எல்லா வகையிலும் புரோவிருத்திக்கு வந்திருப்பதாகவும் சென்ற வருடத்தில் ரூ. 651—4—4 கடன் கொடுத்திருக்க இவ்வருடம் ரூ. 1149—4—0 கடன் கொடுத்திருப்பதாகவும் இவ்வருடம் ரூ. 132—12—1 லாபம் கிடைத்திருப்பதாகவும் சென்ற-ஸு ரூ. 61—0—4 தான் கிடைத்ததென்றும் தேவாலயத்தில் இவ்வருடம் தர்மத்திற்காக தண்ணீர் குழாய் சுமார் 200 ரூ. சிலவில் வைக்க ஏற்பாடு செய்திருப்பதாகவும் இவ்வருடம் ஸ்ரீ ஹநுமத் ஜயந்தி உற்சவம் இந்த நிதியின் போர்டாரால் நடத்தப்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்பத்திராதிபரால் தயாரிக்கப்பட்டதும் இந்நகர் டவுன்ஹைஸ்கூல் ரோடு ஸ்ரீ வெங்கடேஸ்வர் பிரிண்டிங் ஒர்க்ஸ் புரொப்ரைட்டர் ஸ்ரீமான் V. ஸ்ரீனிவாஸ ராவ் அவர்களால் அவருடைய சொந்தச்சிலவில் அச்சிடப்பட்டு கிரயத்திற்கு கொடுக்கப்படுவதுமான மாத்வமித்திரன் காலண்டர் வெளியாகி அதன் கிரயத்திற்காக போஸ்டேஜ் லேபில்களை



அனுப்பிய மாத்வமித்திரன் சந்தாதாரர்களுக்கு அவைகள் அனுப்பப்பட்டதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த காலண்டர் பிரதிதினம் ஸந்த்யாவந்தன ஸங்கல்பம் செய்துகொள்ள மிகவும் உபயோகமாயிருக்கும்படி வருஷம் மாஸம் அயனம் ருது திதி இவைகளை வியக்தமாய் போடப்பட்டிருக்கிறதுமன்றி அந்தந்த தேதியின்கீழே சிராத்தத்திற்கு உரிய திதி இன்னதென்பதை ப்ரதமையாயிருந்தால் 1 என்றும் த்வீதியையாயிருந்தால் 2 என்றும் இவ்வாறு எண்கள் போடப்பட்டிருக்கிறது. சூன்ய திதியாய் இருந்தால் சூன்யமென்றும் திதித்வயங்களாய் இருந்தால் இன்ன இன்ன திதிகள் அன்றைக்கு என்றும் வியக்தமாய் போடப்பட்டிருக்கிறது. பஞ்சாங்கத்தைப் பார்த்து சிராத்தத்திற்குரிய திதி இன்ன தேதி என்று நிஷ்கரிஷையாய் சொல்லும் ஆசாரியர்கள் பல ஊர்களிலும் கிடைப்பதில்லை யாதலால் இந்த காலண்டர் சாமானியர்களுக்கு பரமோபகாரமாயிருக்குமென்பதில் ஆக்ஷேபனை இல்லை. இதைத்தவிர காலண்டரின் அடிபாகத்தில் கிருத்திகை உபவாஸம் ஷஷ்டி உபவாஸம் ஸௌரமாசங்களின் ஆரம்பம், தசமி ஹரிவாஸரம், த்வாதசி ஹரிவாஸரம், ஸாதனி, விஷ்ணுபஞ்சக உபவாஸம், சிரவண உபவாஸம், ஸ்ரீஉத்திராதிமடம் ஸ்ரீ வியாஸராஜமடம் ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமிமடம் இவைகளின் மகாஸ்வாமிகளின் புண்ய தினங்கள் மாத்வர்களின் அநேக விரதங்கள் முதலிய அநேக விஷயங்களடங்கியிருக்கின்றன. மாத்வமித்திரன் சந்தாதாரர்களுக்கு விலை அணா ஒன்றும் இதரர்களுக்கு அணா 1 பைசா 6-ம் தபாற்கூலி வேறும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. காலண்டர்களை மேற்கண்ட அச்சாபீஸ் சொந்தக்காரரிடமிருந்து பெறலாம். காப்பிகள் வெகு சொற்பமே போடப்பட்டிருப்பதால் இதைப்பெறுமல் அநேகர் ஏமாறுவார்களோ என்று அஞ்சுகிறோம்.

---

## ஹரிபஜனை இரவிலதிகநேரம் தகாது.

---

### மைசூர் நரஹரிதாஸர் எழுதுவதாவது:—

ஸ்ரீ விஜயதாஸர் ஹரிஸேவாஸுலாதியில் "மனவேலாலிவிகேளு நினகே பின்னைஸுவே சின்மய மூர்த்திய குணநாம கீர்த்தனேயனு மாள்ப்ப பகேயு நினகே திலளிபுவேனு" பகவானுடைய குணநாமங்களை பஜனை செய்யும் வகையை நான் அறிவிக்கிறேன். மனமே அதை ஆதரவுடன் கேள் என்று முதற் பாட்டில் துவக்கி "யாமராத்திரியொளு ஸத்கர்மஸாதன நேம முகிசி, ஸ்ரீ முகுந்தகே அர்ப்பணமாடி, வாமபாகதி தன்னஸதியிந்தவடகூடி ஸ்ரீமனோஹரன லீலே நுதிசி கொள்ளுத்தா, பலுப்ரேமதிந்தலி நித்ரேயுகளதா, நித்யகாமினிகளபிட்டு, பிரதக்சயன

ஞகி பூமியொளகே அவபா ரதாஸனு; யாமவு நீமொடி தளாதன வெல்லா அமஹாமைதர்யரு எனிஸம்பரு, பிடதே மாமஹேஹறான கிஸ்லவி அவரஸ்வாமித்வவு நடியுவந்தல்லவுகாணிரோ, பூமிஜாபதிதன்ன சக்ரவதிரதுஸாவ, சாமுஹைதர்யர அளிது ஸீருவதக்கே, யாமாமறு நுரு ஜாவ வேஷவுதரிஸி நேமநித்யகளெல்லா பெரகாடிஸிகொண்டு, காமசாரிகளாகி சண்டு கண்டெல்லி சஞ்சரிஸாதரா, மாமஹேஹறான லீலெய பேளிதகேனு, தாமஸதாஸரொக்று திளியோ, கோரதமஸ்ஸ ந அவகே ஆதுவது ஸத்தேதக இல்லா, ஈமஹிமெயறு மிருஷ்டான்ன போஜன வஸனபல ஹேதயக்து ஹக்கிகெட்டு போருவநு, அவனயோக்யதே தந்து கொட்டு ஸ்வாமி தன்ன நிஜதாஸனெந்தவகே காமஸாரதேய நுடிஸி ஸல்ஹாதிப்ப, ஈமஹாபாக்யக்கே எணே காணே எணே காணே ப்ராணநாதகிகீனு செடப்யாடவோ, காயஜ ஜனகசும விஜய விட்டல ரேயன யாமதொளகே பூஜெமாடி நலி நலிதாடுவரு." என்று மூன்றாவது பாட்டை முடிக்கிருக்கிறார். இதன் தாத்பரியமாவது — முதல் யாமத்தில் அதாவது சூரியாஸ்தமனமாகி 7½ நாழிகைக்குள் அதாவது இரவு 9மணிக்குள் ஸத்கர்ம ஸாதனங்கள் நித்யகர்மாக்கள் இவைகளை முடிக்கவேண்டும். அவைகளை பகவானுக்கு அர்பணம் செய்துவிட்டு இரண்டாவது யாமத்தில் நித்ரை செய்ய படுத்துவிடவேண்டும். இடது பக்கத்தில் தன்னுடைய தர்மபத்தினியுடையவனாய் ஸ்ரீ ஹரியின் லீலைகளை சிந்தித்துக்கொண்டு மிகுந்த ப்ரேமையுடன் தன் நித்திரையை நிவிருத்திசெய்துகொள்ளவேண்டும். தினம் தன் தர்மபத்னியை விட்டுப்பிரிந்து பூமியில் படுக்கிறவன் அவன் உத்தமதாஸனன்று அவன் பாமர தாஸன். முதல் யாமத்தை மீறி ஒருவன் செய்த ஸாதனங்களை எல்லாம் அநேக மகா அஸுரர்கள் தங்களுக்காக இழுத்துக்கொள்ளுகின்றனர். ஸ்ரீ ரமாபதியின் தினமாகிய ஏகாதசி இரவில் அந்த மகா அஸுரர்களுக்கு யாஜமான்யம் நடைபெறுவதில்லை என்பதை கண்டுகொள்ளுங்கள். இரவில் முதற் யாமத்திற்கப்பால் செய்துவரும் ஸாதனங்களின் பலன்களை தங்களுக்கு இழுத்துக்கொள்ளும் தைத்யர்களான அந்த ஜாமுகதைத்யர்களைப் பிளந்துக்கொன்றுவிட பகவான் சீதாபதியான ஸ்ரீஹரி ஏகாதசி இரவுமுழுமையும் தன்னுடைய சுதர்சனமென்னும் சக்ராயுதத்தை சுற்றிக்கொண்டிருக்கிறார்.

(தொடரும்.)

## விசேஷ தினங்கள்.

25–5–32 புதவாரம் சிரவண உப. விஷ்ணுபஞ்சக உப.
31–5–32 மங்களவாரம் ஏகாதசி.
1—6–32 புதவாரம் த்வாதசி மணி 6-4க்குள் ஸாதனி
3—6–32 சுக்ரவாரம் அமாவாசை திலதர்ப்பணம்.
4—6–32 சனிவாரம் விஷ்ணுப. உபவாஸம்.
15–6–32 புதவாரம் ஏகாதசி.
17–6–32 சதுர்தசி ஸ்ரீபாதராஜர் புண்ணியதினம்.
18–6–32 சனிவாரம் பௌர்ணமி வடஸாவித்திரி பூஜை.


## மாத்வமித்திரன்.

ஸ்ரீமத்வமதத்தின் உயர்தர நூல்களை சுலபமான தமிழில் சரியானபடி போதிப்பதில் இப்பத்திரிகை இணையற்றது. மடாதிபதிகள் பண்டிதர்கள் பட்டதாரிகள் பணக்காரர்கள் மிட்டாதாரர்கள் முதலியவர்கள் யாவரும் இப்பத்திரிகையை சிலாகிப்பதால்தான் தமிழ்நாடெங்கும் இது சந்தாதாரர்களைக்கொண்டுள்ளது. பத்திரிகையின் வாயிலாய் ஸ்ரீமத்வமதத்தை அறியவிரும்புகிறவர்கள் இப்பத்திரிகைக்கே சந்தாதாரராய்ச் சேருங்கள். இதன் வருடசந்தா முன் பணம் ரூ. 3. பழைய பிரதிகள் விலைக்கு கிடைக்கும். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒரு வாரத்திற்குள்ளாகவே நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பிறகு எழுதினால் இந்த ஆபீசு ஜவாப்தாரியல்ல. பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். போ டாபீசின் பெயரை இங்கிலீஷில் சரியான பெல்லிங்குடன் எழுதியனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் மேல்விலாஸமறிவிக்கப்படவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீ வியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

பாதிவிலை! பாதிவிலை!!

## சொற்பகாலத்திற்குத்தான்.

மாத்வமித்திரன் வாசகர்களுக்குமட்டில் மாத்வமித்திரன் பிரசாரமடைய அன்புடன் இவ்வாறு குறைக்கப்பட்டிருக்கிறது.

## அபூர்வ நாடகங்கள்.

துருவா (ஸ்ரீமான் பாகவதரங்கனுதாசாரியார் ஆசிரியர்) 0—6—0
உஷாபரிணயம் (ஸ்ரீமான் A. R. ராஜகோபால செட்டியார் பதிப்பாசிரியர் 0—4—0
சக்குபாய் ஷை. 0—4—0

தபாற்கூலி வேறு. மேற்கண்ட புஸ்தகங்கள் எமது ஆபீஸில் கிடைக்கும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

## கக்குவான் இருமல்.

இதை 12 நாளிலேயே குணப்படுத்துவதான டாக்டர் பெரியாராவின் ஹூபிங் காப் ஸ்பெஸிபிக் இருக்கையில் 3மாதகாலம் உங்கள் குழந்தை வருந்தும்படி விடாதீர்கள். ஓர் பாட்டில் ரூ. 2—12—0

ஆஸ்த்மா க்யோர் இதரமருந்துகள் உபயோகமில்லாமற் போகுமாகில் காசத்திற்கு இதுதான் கைகண்ட மருந்து. ஓர் பாட்டில் ரூ. 4—8—0

ஆண்டிடயாபிடின் இது நீரழிவை நிச்சயமாய் 6 மாதத்திற்குள் சொஸ்தப்படுத்தும் ஓர் டின் ரூ. 4—12—0

ஆர்டருடன் ரூ. 2-ஐ மணியார்டராகவோ ஸ்டாம்பாகவோ அனுப்பவும்.

PEREIRA & Co., Chemists No. 13, Calicut. (S. India).

# டி. எஸ். ஆர்.

## அண்டு

# கம்பெனி,

## கும்பகோணம்.

| | |
|---|---|
| ஸ்தாபிதம் 1909 | தந்திவிலாஸம் "கோகுல்" |

எங்கள் வாஸனாதிரவியசாலையில்
தயாரித்து விற்பனைக்குதயாராக
இருக்கும் ஸாமான்களின்விபரம்.

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறிஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னானப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர், அரகஜா | பற்பொடி [தைலம் |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

சந்தனாதித் தைலம்

அரைக்கீரைவிதைத் தைலம்.

மற்றும் அநேக வாஸனைசாமான்களும் கிடைக்கும்

கேட்லாக்குக்கு எழுதுங்கள்

Printed at Sri Venkateswar Printing Works and
Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam.